வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 20.04.2024 சனிக்கிழமை இதழ் : 111 பக்கங்கள் : 12




இன்று முதல்

# எரிபொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்!

## எரிபொருள் விநியோகஸ்தர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்ரல் 20

நாட்டில் எரிபொருட்களுக்கு இன்று சனிக்கிழமை முதல் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விதிக்கப்பட்ட வற் வரி காரணமாக இந்த நிலைமை ஏற்படும் ஆபத்து உள்ளது என்று அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் கபில நாவுதுன்ன தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களின் வற் தவணைகள் இன்று சனிக்கிழமை முதல் செலுத்தப்பட வேண்டும். இந்த வரியால் எரிபொருள் நிலையங்கள் கடும் நெருக்கடி நிலைக்கு உள்ளாகியுள்ளன. எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வற் வரி என்பது உரிமையாளருக்கு கிடைக்கக்கூடிய சிறிய தொகையில் செலுத்த வேண்டிய வற் வரியாகும். அதற்குரிய வற் தவணைகள் நாளை (இன்று) முதல் செலுத்தப்பட வேண்டும்.

அவ்வாறு செலுத்தப்படாது விட்டால் எரிபொருள் நிலையங்களால் தொடர்ந்து இயங்க முடியாது போய்விடும். கடந்த 3 மாதங்களாக இந்த

11

# மெய்வல்லுநர் ஜாம்பவான் எதிர்வீரசிங்கம் காலமானார்!



நியூயோர்க், ஏப். 20

இலங்கைக்காக ஆசிய மெய்வல்லுநர் போட்டியில் முதல் தங்கப் பதக்கம் வென்று கொடுத்தவரான நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் தனது 89ஆவது வயதில் அமெரிக்காவில் காலமானார்.

மெய்வல்லுநரும் கல்வியியலாளருமான நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் ஒலிம்பிக், ஆசிய தடகள போட்டி, பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தார்.

11

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சர்வதேச விசாரணை தேவை!

கொழும்பு, ஏப். 20

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியம் என்று சமூகம் மற்றும் மத நிலையத்தின் ஆராய்ச்சி குழு வலியுறுத்தியுள்ளது.

இந்தக் குண்டுத் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரியை கண்டுபிடிக்க சர்வதேச உதவியை பெறவேண்டும் எனவும் குறித்த நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல்கள் இன்னமும் நீதிக்காக

11

# இலங்கைக்கு ஆதரவு; உலக வங்கி வாக்குறுதி



நியூயோர்க், ஏப். 20

இலங்கை நிதித்துறையின் ஸ்திரத் தன்மைக்கு ஆதரவளிப்பதாக உலக வங்கியின் தனியார் துறை பிரிவான சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய துணை தலைவர் றிக்கார்டோ புலிடி (riccardo puliti) உறுதியளித்துள்ளார்.

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர்

11



# அன்னை பூபதிக்கு நேற்று வடக்கு, கிழக்கில் அஞ்சலி!

மட்டக்களப்பு, ஏப். 20

அன்னை பூபதியின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் வடக்கு, கிழக்கிலும் புலம்பெயர் தேசங்களிலும் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

பிரதான நினைவேந்தல் மட்டக்களப்பு - நாவலடியிலுள்ள அவரின் நினைவிடத்தில் நடைபெற்றது.

அன்னை பூபதியின் மூத்த மகளின் ஏற்பாட்டில் அன்னையின் உருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. இந்த நினைவேந்தலில், மட்டு. - அம்பாறை அன்னையர் முன்னணி அமைப்பின் கொடி ஏற்றப்பட்டு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதேபோன்று மற்றோர் அஞ்சலி நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர்

11

# ஜனாதிபதி தேர்தலுக்கு முன் ஆளுநர் பதவிகளில் மாற்றம்!

கொழும்பு, ஏப். 20


ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக மாகாணங்களின் ஆளுநர்களை மாற்றுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார் என்று அறிய வருகின்றது.

இதன்படி, வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தென் மாகாணத்துக்கு நியமிக்கப்படவுள்ளார். இதனால், ஏற்படும் வடமேற்கு மாகாண ஆளுநர் பதவிக்கு நஸீர் அஹமட் நியமிக்கப்படவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இதேநேரம், தற்போது தென் மாகாண

11

# நயினை அம்மன் ஆலய பிரதம குரு காலமானார்



யாழ்ப்பாணம், ஏப். 20

வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசனி அம்மன் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ ப. முத்துக் குமார சுவாமி குருக்கள் நேற்று காலமானார்.

குருக்களின் மறைவையொட்டி தெல்லிப்பழை துர்க் காதேவி தேவஸ் தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன்

11

# சிறுமி மரணத்துக்கு நீதி கோரி பொலிஸ் நிலையம் முற்றுகை!



வவுனியா, ஏப். 20

வவுனியாவில் கடந்த புதன்கிழமை உயிரிழந்த சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி தரணிக்குளம் கிராம மக்கள் ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 17 ஆம் திகதி தரணிக்குளம் கிராமத்தில் வீட்டில் உயிரிழந்த நிலையில் 17 வயதான சதுமிதா என்ற சிறுமியின் சடலம் மீட்கப்பட்டது. பின்னர் சிறுமியின் இறுதிக் கிரியைகள் நடைபெற்றன. இந்த நிலையில், சிறுமியின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்து சிறுமியின் வீட்டுக்கு முன்பாக கிராம

11

# பிரிட்டன் சிறுவர்களுக்கு கிடைக்கும் பாதுகாப்பு தமிழ் சிறாருக்கும் அவசியம்

## டியாகோ கார்ஷியா விவகாரம் குறித்து பிரிட்டிஷ் உச்சநீதிமன்றம் தெரிவிப்பு

லண்டன், ஏப். 20

பிரிட்டனின் டியாகோ கார்சியாவில் 2021 முதல் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஐந்து இலங்கை தமிழ் சிறுவர்களும் பிரிட்டனின் சிறுவர்கள் போல தீமையிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என பிரிட்டனின் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரிட்டிஷ் இந்து சமுத்திர பிரதேசத்தின் உச்சநீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

டியாகோ கார்சியா தீவில் சிக்குண்டுள்ள இலங்கை தமிழர்கள் மற்றும் சிறுவர்களுக்கு சார்பாக தீர்ப்பளித்துள்ள நீதிமன்றம் பிரிட்டனின் சிறுவர் சட்டத்தின் முக்கிய பாதுகாப்பு

11

# உணவருந்திய நிலையில் சடலம் மீட்பு!

கிளிநொச்சி, ஏப். 20

உணவருந்திய நிலையில் இறந்தவரின் சடலம் கிளிநொச்சியில் மீட்கப்பட்டது.

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட கிராம சேவகர் பணிமனையில் நேற்று வெள்ளிக்

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது

மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன் யாரையுமே மரியாதைக் குறைவாகப் பேசி அறியாதவர்.

பாடல்களில்கூட சற்று மரியாதைக் குறைவான வார்த்தைகள் வந்துவிட்டால் அதை மாற்ற வழி இருக்கிறதா என்று பாடலாசிரியரைக் கேட்பாராம்.

கவியரசர் கண்ணதாசன் ஒரு படத்துக்கு, “யாரை நம்பி நான் பிறந்தேன் போங்கடா போங்க” என்று ஒரு பாடலில் எழுதியிருந்தார்.

மெல்லிசை மன்னர், “என்ன கவிஞரே, இது மரியாதை குறைவாய் இருக்கிறதே, கொஞ்சம் மாற்றக்கூடாதா? யாரை நம்பி நான் பிறந்தேன், போங்கய்யா போங்க, என்று எழுதக்கூடாதா?” என்று கேட்டாராம்.

அதற்கு கவிஞர் கிண்டலாக, “டேய், நீ ரொம்ப அடக்கமானவன். இது எனக்கு மட்டுமல்ல, ஊருக்கே தெரியும். “விஜய வாடா” என்கிற ஊரைக் கூட “விஜயவாங்க” என்று சொல்கிற ஆள் நீ. பேசாம நான் சொல்கிற பல்லவியை அப்படியே போடு” என்றாராம்.

நேற்றைய ஈழநாடுவில் ஒரு செய்தி வெளிவந்திருந்தது. தமிழ் அரசு கட்சியின் மத்திய செயல் குழுக் கூட்டம் இன்று (நேற்று) நடைபெறுகிறது என்பதுதான் அந்தச் செய்தி. அந்தச் செய்தியை மாத்திரமல்ல, அதற்கு முன்னரும் அந்தக் கூட்டம் பற்றி பலரும் என்ன நடக்கும் என்பது குறித்த தத்தமது ஆரூடங்களை எழுதியிருந்ததால், அந்தக் கூட்டத்தில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதை அறிவதற்காக ஈழநாடு செய்தி ஆசிரியரோடு நேற்று மாலை பேசினேன்.

அவர் சொன்னார்: “கூட்டம் முடிந்திருக்கும்தான். ஆனால், யாரும் தொலைபேசியில் தொடர்பில் வருகிறார்கள் இல்லை” என்றார்.

நீண்ட பல முயற்சிகளின் பின்னர்தான் விசயம் தெரியவந்தது. நேற்று அதாவது பத்தொன்பதாம் திகதி மத்திய செயல்குழுக் கூட்டத்துக்கான அழைப்பை கட்சியின் மத்திய செயல்குழு உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்குமாறு கட்சியின் தலைவர் கட்சியின் நிர்வாக செயலாளருக்கு அறிவித்திருக்கிறார். அவரும் அழைப்பிதழை தயாரித்து அனுப்புவதற்கு தயாரானபோதுதான் தலைவரிடமிருந்து தகவல் வந்ததாம், அன்று அன்னை பூபதியின் நினைவுநாள் அதனால் மட்டக்களப்பிலிருந்து வருபவர்களுக்கு வர வசதியிருக்காது என்பதால் கூட்டத்தை இருபத்தி மூன்றாம் திகதிக்கு ஒத்திவைப்போம் என்றிருக்கிறார் தலைவர்.

இருபத்தி மூன்றாம் திகதி சித்திரா பௌர்ணமி என்பதால் அன்றும் பலருக்கும் வசதி வராது என்பதால் வேறு ஒரு தினத்துக்கு மீண்டும் ஒத்தி வைக்கிறார்களோ தெரியவில்லை.

ஆனால், இந்தக் கூட்டம் கட்சிக்கு எதிராகத் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் இருக்கும் வழக்கை அடுத்த தவணையில் எப்படி கையாள்வது என்பது தொடர்பாக முடிவெடுப்பதற்காகவே முக்கியமாகக் கூட்டப்படவிருந்தது.

அந்த வழக்கு எதிர்வரும் இருபத்தி ஐந்தாம் திகதி விசாரணைக்கு வரவிருக்கின்றது. இந்தக் கூட்டத்தில் எத்தகையை முடிவை எடுத்தாலும், அது தொடர்பாக வழக்கில் எதிராளிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஏழு பேரின் சார்பிலும் உரிய பதில்களை தயாரித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அவகாசம் கிடைக்குமா என்பது தெரியவில்லை.

இந்தச் செய்திகளை சொல்லிக்கொண்டிருந்த ஒரு நண்பர் சொன்னார், இப்போது கூட்டத்தை எப்போது நடத்துவது என்பது குறித்து ஆராய்வதற்காக ஒரு கூட்டம் நடக்கவிருக்கின்றதாம். அந்தக் கூட்டத்தில்தான் அடுத்த கூட்டம் எப்போது என்பது தெரியவரும் என்றார்.

அந்தக் காலத்தில் தமிழ் படங்களில் வரும் காட்சிகள் பலருக்கும் ஞாபகம் இருக்கும். கதாநாயகனுக்கும் கதாநாயகிக்கும் இரு வீட்டாரும் திருமணம் பேசி முடிவு செய்வார்கள். அதன் பின்னர் திருமணத்துக்கு நாள் குறிக்கின்ற சடங்கு - அதுவும் திருமண வைபவம் போல பெரியதாக நடக்கும்.

அதுபோலத்தான் தமிழ் அரசில் மத்திய செயல் குழு கூடுவதற்கும் பொருத்தமான நாள் பார்ப்பதற்கு சடங்கு செய்கிறார்களோ தெரியவில்லை என்றார் அந்த நண்பர்.

இந்தப் பத்தியை எழுதி முடிக்கும் வரை தமிழ் அரசின் மத்திய செயல்குழு கூடுவதற்கான திகதி முடிவெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டதாகத் தெரியவரவில்லை.

வழக்கை எப்படி சந்திப்பது என்பது பற்றி ஒரு முடிவுக்கு வராவிட்டால் என்ன கட்சி குடிமுழுகியா விடப்போகின்றது.

“என்ன முடிவு எடுத்தாலும் அடுத்த ஆண்டுவரை வழக்கு நடக்கத்தானே போகின்றது” என்று கட்சியின் தலைவர் ஒருவர் சில நாட்களுக்கு முன்னர் கூறியது இப்போது ஞாபகத்துக்கு வந்தது.

நமது தமிழ் அரசின் தலைவர் மெல்லிசை மன்னர் விஸ்வநாதன் போல, யார் மனதும் புண்பட்டு விடக்கூடாது என்று நினைப்பவர் என்பது நாம் அறிந்ததுதான். அதற்காக மத்திய செயல் குழு உறுப்பினர்கள் எவரும் மனம் நொந்துவிடக்கூடாது என்று அவர்கள் ஒவ்வொருவருக்கும் வசதியான நாளைத் தேடிக் கொண்டிருக்கிறாரோ தெரியவில்லையே.

**- ஊர்க்குருவி.**

# பாடசாலை போஷாக்கு திட்டத்துக்காக உணவு பொருட்கள் வழங்கல் ஆரம்பம்




கொழும்பு, ஏப். 20

பாடசாலை போஷாக்குத் திட்டத்துக்காக உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்பட்ட உணவுப் பொருட்களை பாடசாலைகளுக்கு வழங்கும் பணி நேற்று ஆரம்பமானது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய பாடசாலை மாணவர்களுக்கு போஷாக்குள்ள உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்காக உலக உணவுத் திட்டத்தின் மூலம் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகம் நேற்று வெயங்கொட உணவு களஞ்சிய வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களிடையே இரும்புச் சத்து குறைபாட்டைக் குறைக்கும் நோக்கில், பாடசாலை உணவுக்கு செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கப்படுவதுடன், ஜனாதிபதி செயலகத்தின் கீழுள்ள உலக உணவுத் திட்டத்துக்கான கூட்டுச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் எம். ரிப் லானின் மேற்பார்வையில் இந்த விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன்படி முதற்கட்டமாக மாகாண மட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு 735 மெற்றிக் தொன் அரிசி வழங்கும் நடவடிக்கை நேற்று ஆரம்பமானதுடன் இன்றும் இந்தப் பணிகள் தொடரும்.

சம்பந்தப்பட்ட மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களின் கண்காணிப்பின் கீழ் பாடசாலைகளுக்கு அரிசி விநியோகிக்கப்படுகிறது. (எ)

# கடலில் கைப்பற்றிய போதைப்பொருட்களை பரிசோதனைக்கு அனுப்ப நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஏப். 20

காலி கடற்கரையில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 380 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான போதைப் பொருட்களை அரசாங்க இரசாயன பகுப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது

கடந்த 12 ஆம் திகதி 10 மீனவர்களிடம் கைப்பற்றப்பட்ட 263 கிலோ கிராம் போதைப்பொருளை பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் நீதிமன்றில் பாரப்படுத்திய போதே நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

காலி கடற்கரையிலிருந்து 246 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கடற் பரப்பில் வைத்து இந்த போதைப்பொருட்களை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

மீனவர்கள் மீது போதைப்பொருள் வைத்திருந்தமை மற்றும் கடத்தல் தொடர்பான வழக்கு எதிர்வரும் நாட்களில் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# “கடன் வழங்குநர்களுடன் உடன்பாட்டை எட்டலாம்”

கொழும்பு, ஏப். 20

அனைத்து கடன் வழங்குநர்களுடனும் கொள்கை ரீதியான உடன்படிக்கையை எட்ட முடியும் என அரசாங்கம் நம்புவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

வாஷிங்டனில் இடம்பெற்ற நேர்காணலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு

உலகில் மிகக் குறைந்த வரி விதிக்கும் நாடுகளில் ஒன்றாக நாம் பெயரிடப்பட்டுள்ளோம். ஆனால், இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் நாங்கள் படிப்படியாக வரி வருவாயை அதிகரித்துள்ளோம்.

நாம் இப்போது வரி செலுத்துவதிலிருந்து விலக்கை நீக்கியுள்ளோம். வரி இணக்கத்தை வலுப்படுத்தியுள்ளோம். 2023 ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து அரசாங்கத்தின் வருமானம் 11 வீதமாக அதிகரித்துள்ளது, இது அரசாங்கத்தின் வருமானத்தில் 8.1 வீத ஆகும்.

2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் அந்த எண்ணிக்கை 12 வீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். மேலும் அந்த இலக்கை எங்களால் அடைய முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். தற்போது, வரி இணக்கம் 130 வீத வளர்ச்சியை எட்டியுள்ளது.

வரி தொடர்பான பதிவு செய்தலும் அதிகரித்துள்ளது. நல்ல எண்ணிக்கையாக இருந்தாலும் திருப்தியடைய முடியாது. வரி செலுத்த வேண்டியவர்கள் அனைவரையும் வரி செலுத்த வைக்க வேண்டும். - என்றார். (எ)

# விசேட மற்றும் சிறார்களுக்கான மருத்துவர்களுக்கு பற்றாக்குறை

கொழும்பு, ஏப். 20

விசேட மற்றும் சிறுவர்களுக்கான மருத்துவர்களின் பற்றாக்குறை நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருத்துவர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். ஏனையோர் வெளிநாடுகளுக்கு பயிற்சிக்காக சென்றுள்ளனர். இதனால் மருத்துவர்களுக்கான பற்றாக்குறை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் பாலித மஹிபால தெரிவித்தார்.

வெளிநாட்டுக்குப் பயிற்சிக்காக சென்ற சில மருத்துவர்கள் தற்போது நாடு திரும்பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அம்பாந்தோட்டை மற்றும் எம்பிலிப்பிட்டிய மருத்துவமனைகளில் விசேட மருத்துவர்கள் இன்மையால் நோயாளிகள் சிரமத்துக்குள்ளானதாக அவர் மேலும் கூறினார். (எ)

ஈழநாடு
Eelanadu
20.04.2024 சனிக்கிழமை
குரோதி வருடம், சித்திரை 07

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஈழத் தமிழர் விவகாரம் காணாமல் போகும் ஆபத்து!

உக்ரைன் - ரஷ்ய யுத்தத்தின்மீதான கவனம் இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தத்தை தொடர்ந்து புதியதொரு நிலைக்கு சென்றது. உலகின் பிரதான கவனம் மத்திய கிழக்கை நோக்கி நகர்ந்தது. தற்போது நிலைமைகள் மேலும் சிக்கலடைந்திருக்கின்றன. மத்திய கிழக்கின் யுத்த மேகம் உலக அரசியல் நிகழ்ச்சி நிரலையே மாற்றப் போகின்றது. ஈரானின் தாக்குதலை தொடர்ந்து நிலைமைகள் வேகமாக மாறி வருகின்றன. இஸ்ரேல் பதில் தாக்குதலை மேற்கொண்டிருக்கின்றது. இந்த யுத்தமானது மத்திய கிழக்கு இதுவரை காணாத யுத்தமாகவும் மாறலாமென்று சர்வதேச அரசியல் அவதானிகள் எச்சரிக்கின்றனர்.

இவ்வாறானதொரு நிலையில் ஈழத் தமிழர்கள் மீதான சர்வதேச கரிசனை என்று ஒன்றிருக்கப் போவதில்லை. கடந்த பதினான்கு ஆண்டுகால அரசியல் நகர்வுகள் படுதோல்வியிலேயே முடிந்திருக்கின்றது. சர்வதேச அழுத்தங்கள் தொடர்பான கதைகள் அனைத்தும் புஷ்வாணமாகிவிட்டது. இவ்வாறானதொரு பின்புலத்தில் வெளியாருக்காகக் காத்திருக்கும் அரசியல் தொடர்பில் நம்பிக்கைகளை எவரேனும் விதைக்க முற்பட்டால் - சந்தேகமில்லை - அவர்கள் மக்களை ஏமாற்றுகின்றனர். அவர்களது நோக்கும் தமிழ் மக்களுக்கு நல்லதோர் எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பதல்ல மாறாக தங்களின் கதிரைகளை பாதுகாத்துக் கொள்வது மட்டும்தான்.


இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தத்தின்போதான மனித உரிமைகள் சார்ந்த குற்றச்சாட்டுகளுக்கு இஸ்ரேல் எவ்வாறு பதிலளித்திருந்தது - அதேவேளை, இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா எவ்வாறு பதிலளித்திருந்தது என்பதெல்லாம் நமக்கு எதை கற்றுத்தருகின்றது? எதையாவது நாம் கற்றுக்கொள்ள முயற்சிக்கின்றோமா? நமது அரசியல் சூழலை அவதானித்தால் எதையும் கற்றுக்கொள்வதற்கான முதிர்ச்சியை காணமுடியவில்லை. தொடர்ந்தும் கதிரைகளை பாதுகாப்பதற்கு ஏற்றவாறு அரசியல் கருத்துகளை முன்வைப்பதையே காண முடிகின்றது. அண்மையில், தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருந்த கருத்துகள் இதற்கு சிறந்த சான்றாகும்.

தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் தென்னிலங்கையில் இனவாதம் மீண்டும் எழுமாம் - அவ்வாறாயின் இப்போது இனவாதம் இல்லையா? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் - மைத்திரி அரசாங்கத்துடன் தேனிலவில் இருந்த காலத்தில் - ஆகக் குறைந்தது, கல்முனை பிரதேச செயலக பிரச்னையைக்கூடத் தீர்க்க முடியவில்லை. இந்த நிலையில் - இது மாற்றத்துக்கான தேர்தல் - எனவே, தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்கே வாக்களியுங்கள் என்று எந்த அடிப்படையில் இவர்களால் கூற முடிகின்றது? மக்கள் ஒருபோதுமே சிந்திக்கவே மாட்டார்கள் என்றா இவர்கள் யோசிக்கின்றனர்?

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னை காணமால் போய்விடும் ஆபத்திலிருந்து அதனை காப்பாற்ற வேண்டுமாயின், தமிழ் மக்கள் ஜனநாயக வழிமுறையின் மூலமாக தங்களின் கோரிக்கையை மீண்டும் உரத்துக் கூற வேண்டியிருக்கின்றது. அவ்வாறு கூற வேண்டுமாயின், இந்த ஜனாதிபதித் தேர்தலை விடவும் வேறு என்ன சிறந்த வழியுண்டு? தமிழ் பொது வேட்பாளர் எண்ணக்கருவை எதிர்ப்பவர்கள் இதுவரையில் தர்க்கரீதியில் மாற்று யோசனையை முன்வைக்கவில்லை. பிரச்னை - அவர்களால் முடியவில்லை என்பதுதான்.

# எல்லா காலத்துக்கும் மிகவும் முக்கியமான ஒரு பெருந்தகை கலாநிதி ஏ.ரி. ஆரியரத்ன

**கலாநிதி ஜெகான் பெரேரா**



கலாநிதி ஏ.ரி. ஆரியரத்னவின் இறுதிச்சடங்கை அரச மரியாதையுடன் நடத்துவதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானம் சர்வோதய இயக்கத்தை தாபித்து அவர் 65 வருடங்களுக்கும் மேலாக செய்துவந்த சேவைகளுக் கான ஒரு அங்கீகாரமாகும். சிரமதானம், கிராமோதயம் மற்றும் சர்வோதயம் போன்ற அவர் முன்னெடுத்த கோட்பாடுகள் இன்று இலங்கையின் பிரதான குடியியல் மற்றும் அரசியல் வாழ்வின் அங்கமாக பின்னிப் பிணைந்துவிட்டன.

பாரம்பரிய நடைமுறைகளையும் நம்பிக்கை முறைமைகளையும் ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்துவதில் கலாநிதி ஆரியரத்ன கடைப்பிடித்த அணுகுமுறை சர்வோதய இயக்கத்தை நாட்டின் அபிவிருத்திச் செயன்முறையின் இயற்கையான அங்கமாக மாற்றுவதற்கு உதவியது. சிரமதானம் போன்ற சமூகத்தை மையமாகக்கொண்ட பாரம்பரிய நடைமுறைகளை மாத்திரமல்ல, பன்முகத் தன்மை, சமத்துவம் போன்ற தாராள பண்புகளையும் சிவில் சமூகத்திற்கு ஊட்டுவதில் செய்த சேவையே அவரின் மகத்தான பங்களிப்பாகும். அந்த பண்புகள் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பரவச்செயவதற்கு அவர் தன்னை அர்ப்பணித்தார்.

கலாநிதி ஆரியரத்னவின் சிந்தனையும் பணியும் சிங்கள பௌத்த கலாசாரத்தில் இருந்தே தொடங்கியது. தலைநகர் கொழும்பில் பிரதான பௌத்த பாடசாலைகளில் ஒன்றான நாலந்தா கல்லூரியின் முன்னாள் ஆசிரியரான அவர் இன,மத,சாதி பிளவுகளினால் பாதிக்கப்பட்டிருந்த ஒரு சமூகத்தில் மற்றைய சமூகங்களை மதிக்கின்ற பண்புகளை வளர்த்தெடுப்பதில் பெரிதும் அக்கறை காட்டிச் செயற்பட்டார்.

தங்களது சமூகத்தின் மேம்பாட்டுக்கு பங்களிப்புச் செய்ய விரும்பிய இளைஞர் யுவதிகளைக் கவரும் ஒரு காந்தமாக அவரின் தலைமையில் இயங்கிய சர்வோதய இயக்கம் விளங்கியது. இன்று சிவில் சமூக அமைப்புக்களின் தலைவர்களாக இருக்கும் பலர் ஆரம்ப கட்டத்தில் கலாநிதி ஆரியரத்னவின் அருகில் இருந்தே பயிற்சியைப் பெற்றார்கள். அவர் “லொக்கு சேர் ” என்று அழைக்கப்பட்டார். அவருடன் பணியாற்றியவர்களில் நானும் ஒருவன். நான் அவரின் சிந்தனையின் செல்வாக்கிற்கு உள்ளானேன்.

அவர் நம்பிக்கை கொண்டிருந்த மூன்று கோட்பாடுகள் எல்லாக் காலத்துக்கும் முக்கியமானவை. முதலாவது அபிவிருத்தி என்பது பெரும்பான்மையானவர்களினதோ அல்லது சிறுபான்மையானவர்களினதோ நல்வாழ்வுக்காக அல்ல சகலரினதும் நல்வாழ்வுக்கானதாக இருக்கவேண்டியது அவசியமாகும். இரண்டாவது அந்த அபிவிருத்தி பொருளாதார அபிவிருத்தியாக மாத்திரமல்ல, சமூக, கலாசார, தார்மீக மற்றும் அரசியல் அபிவிருத்தி சார்ந்ததாகவும் இருக்கவேண்டும். மூன்றாவது அடிமட்டத்தில் இருந்து அபிவிருத்தியை முன்னெடுப்பது என்பது கிராம மட்டத்தில் அதிகாரத்தைப் பன்முகப் படுத்தி சாத்தியமானளவுக்கு கீழ்மட்டத்துக்கு வளங்களைக் கொண்டு செல்வதாக இருக்க வேண்டும்.

கலாநிதி ஆரியரத்ன முழுநிறைவான ஒரு சிவில் சமூகத் தலைவர். அவர் அரச அல்லது அரசியல் அதிகாரத்தைக் கொண்டிருக்க வில்லை. ஆனால் பெரும்பாக மட்டத்தில் அரசினாலும் பின்பற்றக்கூடியதாக நுண்மட் டத்தில் சாத்தியமானளவு செயற்பாடுகளை முன்னெடுக்கும் சிந்தனைகளில் இருந்தும் ஆற்றலில் இருந்துமே அவரது அதிகாரம் பிறந்தது. சர்வோதய இயக்கம் தொட்டுச் செல்லாத அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்தவொரு செயற்பாடோ அல்லது அவரிடம் குறைந்தது ஒரு பயிற்சியையாவது பெறாத சமூகப்பணியாளரோ இன்று கிடை யாது.

கடந்த 65 வருட காலத்தில் இலங்கையின் பல அரசாங்கங்களில் எந்த ஒன்றாவது தொலைநோக்குடைய இந்த தலைவரிடம் அதன் தேசிய அபிவிருத்தி செயற்திட்டத்தை ஒப்படைத்திருந்தால் நிலைமை எவ்வாறு வேறுபட்டதாக இருந்திருக்கும் என்பதை இன்றைய பொருளாதார வீழ்ச்சி சூழ்நிலையில் கற்பனை செய்துபார்க்கக் கூடியதாக இருக்கிறது.

வாழ்வில் நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டிய விடயங்கள் குறித்து விளங்கவைக்க எனக்கு கலாநிதி ஆரியரத்ன ஒரு தடவை கதையொன்றைச் சொன்னார். அது ரஷ்யாவின் தலைசிறந்த நாவலாசிரியர் டோல்ஸ்ரோயிடமிருந்து பெறப்பட்ட கதை.

ஒருவரின் வாழ்நாளில் மிகவும் முக்கியமான நேரம் எது? மிகவும் மக்கியமான நபர் யார்? செய்யவேண்டிய மிகவும் முக்கியமான காரியம் என்ன? என்ற மூன்று கேள்விகளுக்கு விடைகளைக் காண விரும்பிய மன்னர் ஒருவரைப் பற்றிய கதை.


இந்த கேள்விகளை புத்திசாலிகளிடம் ( ஆகவும் சிறந்த புத்திசாலிகள் அல்லர்) மன்னர் கேட்டபோது பலர் வேறுபட்ட விடைகளைக் கூறினார்கள்.

சிலர் மூன்று கேள்விகளுக்கும் பிறந்த நேரம் (சோதிடம் ), தாய் அல்லது தந்தை, நன்றாக சம்பாதிப்பது என்ற விடைகளைக் கூறினார்கள்.

டோல்ஸ்ராயின் விடைகள் கலாநிதி ஆரியரத்னவுக்கு ஏற்புடையவையாக இருந்தன. மிகவும் முக்கியமான நேரம் தற்போதைய தருணமே. மிகவும் முக்கியமான நபர் தற்போது எம்முடன் இருப்பவரே. அன்பைச் செலுத்தி அந்த நபருக்கு சேவை செய்வதே செய்யவேண்டிய மிகவும் முக்கியமான காரியம்.

நான் உட்பட தன்னுடன் இருந்தவர்கள் மீது கலாநிதி ஆரியரத்ன கருத்தூன்றிய கவனம் செலுத்தினார்.எமது கைகளைப் பற்றிப் பிடித்துக் கொண்டு எமது முகத்தை உற்று நோக்கி அவர் பேசினார். அந்த கதையின் படி அவர் வாழ்ந்தார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள்.

**இடபம்**
பிரியமானவர்களுடன் திடீர் சந்திப்பு நிகழும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**மிதுனம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கடகம்**
இதுவரை இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டி வரும். வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**கன்னி**
விடாப்பிடியாக செயல்பட்டு ஒருசில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரும். மேலதிகாரியுடன் விவாதம் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறுவீர்.

**துலாம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். பெற்றோருடன் மனம் விட்டு பேசுவீர்கள். உங்களின் புதிய முயற்சிகளை பாராட்டுவார். மதிப்புக் கூடும் நாள்.

**விருட்சிகம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**தனுசு**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். அதிஷ்டம் நிறைந்த நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப் போகும். பொறுமை தேவைப் படும் நாள்.

**கும்பம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள்.

**மீனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக்கொடுத்து வேலை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

# பணம் கொடுத்ததாக நிரூபித்தால் அரசியலிலிருந்து விலகத் தயார்!

## அண்ணாமலை

*கரூர், ஏப். 20*

"கோவையில் ஒரு வாக்காளருக்காவது பா. ஜ. க. சார்பில் வாக்குக்கு பணம் கொடுக்கப்பட்டது என நிரூபிக்கப்பட்டால் நான் அரசியலில் இருந்து விலகத் தயார்." என்று பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

கரூர் மக்களவைத் தொகுதியில் வாக்களித்த பின் அவர் செய்தியாளரிடம் பேசுகையில்,

"மக்கள் அனைவரும் தங்களது ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற வாக்களிக்க வேண்டும்.




தேர்தல் நேர்மையாக நடத்தப்பட்டு வருகிறது. கோவையில் ஒரு வாக்காளருக்காவது பா. ஜ. க. சார்பில் வாக்குக்கு பணம் கொடுக்கப்பட்டது என நிரூபிக்கப்பட்டால் நான் அரசியலில் இருந்து விலகத் தயார். பண அரசியலுக்கு மக்கள் முடிவு கட்டும் தேர்தலாக இந்தத் தேர்தல் இருக்கும்.

முழுமையாக நேர்மையான அறம் சார்ந்த வெளிப்படையான தேர்தலாக நடத்தப்பட்டு வருகிறது. தற்போது அறம் சார்ந்த வேள்வி எடுக்கப்பட்டுள்ளது." என்றார். (ஐ)

# வாக்குக்கு பணம் வழங்கும் முறை தமிழ்நாட்டில் மட்டுமே உள்ளது!

## அன்புமணி ராமதாஸ் தெரிவிப்பு

*விழுப்புரம், ஏப். 20*

"தமிழகத்தில் மட்டும்தான் வாக்குக்கு பணம் கொடுக்கும் முறை உள்ளது. பிற மாநிலங்களில் இந்த பழக்கமில்லை. இதற்கு தீர்வு காணப்பட வேண்டும்" என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலில் வாக்குப் பதிவு தமிழ்நாடு - புதுச்சேரியில் நேற்று வாக்குப் பதிவு நடைபெற்றது.

திண்டிவனத்தில் வாக்களித்த பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர், "தமிழகத்தில் மட்டும்தான் வாக்குக்கு பணம் கொடுக்கும் முறை உள்ளது. பிற மாநிலங்



களில் இந்த பழக்கமில்லை. இதற்கு தீர்வு காணப்பட வேண்டும்.

"வாக்காளர்கள் மௌன புரட்சி நடத்தி வருகிறார்கள். இந்தத் தேர்தலில் பா. ம. க. கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெறும். தேர்தல் காலங்களில் வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கும் முறை தொடர்கிறது. இது நாட்டுக்கு தீங்கை ஏற்படுத்தும்" - என்றார். (ஐ)

# எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக தயாநிதி மாறன் அவமதிப்பு வழக்கு!



*சென்னை, ஏப். 20*

75 சதவீத தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்தவில்லை என பேசிய அ. தி. மு. க. பொதுச்செயலாளர் பழனிசாமிக்கு எதிராக மத்திய சென்னை மக்களவைத் தொகுதி தி. மு. க. வேட்பாளர் தயாநிதி மாறன் குற்றவியல் அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார்.

சென்னையில் கடந்த 15ஆம் திகதி நடந்த பிரசாரக் கூட்டத்தில் பழனிசாமி இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியிருந்தார்.

இந்த அவதூறு பேச்சுக்கு மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் இல்லையென்றால் அவதூறு வழக்கு தொடரப்படும் என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில் சென்னை - எழும்பூர் நீதிமன்றத்தில் தயாநிதி மாறன் அவமதிப்பு வழக்கு தொடுத்துள்ளார்.

இந்த வழக்கு எதிர்வரும் ஜூன் 14ஆம் திகதி விசாரணைக்கு வரவுள்ளது. (ஐ)

# தமிழ்நாட்டில் சில இடங்களில் வாக்குப் பதிவு தாமதமானது!

*சென்னை, ஏப். 20*

தமிழ்நாட்டில் சில இடங்களில் வாக்குப்பதிவு தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு உள்ளிட்ட காரணங்களால் சில இடங்களில் வாக்குப்பதிவு தாமதமாக தொடங்கியது.

நேற்று தமிழ்நாடு - புதுச்சேரியில் வாக்குப் பதிவு நடைபெற்றது. காலை 7 மணிக்கு வாக்குப் பதிவு ஆரம்பமானது.

இந்நிலையில் தமிழகத்தில் சில இடங்களில் வாக்குப்பதிவு தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு உள்ளிட்ட காரணங்களாலேயே வாக்குப்பதிவு தாமதமாகவே தொடங்கியது. (ஐ)

# போதைப்பொருள் கடத்துவோருக்கும் பொலிஸாருக்கும் நெருங்கிய தொடர்பு!

## ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 20

**போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் பெரிய முதலையை பிடியுங்கள். பொலிஸாருக்கும் தொடர்பு இருப்பதாக மக்கள் தெரிவிக்கிறார்கள் என மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.**

யாழ். மாவட்ட செயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது, பொலிஸாரால் போதைப்பெருள் கடத்தல் தொடர்பில் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக ஹெரோயின் தற்போது கிடைப்பதில்லை. அதற்கு பதிலாக மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு பயன்படுத்தப்படும் மருந்து வில்லைகளே பயன்படுத்தி வருகிறார்கள். இது தொடர்பாக மன்னாரில் சிலரை கைது செய்து சட்ட நடவடிக்கைக்குட்ப டுத்தியுள்ளோம்.

மேலும், கஞ்சா போதைப் பொருள் இந்தியாவில் இருந்தே வடபகுதிக்கு கடத்தப்படுகிறது. இங்கிருந்தே தென் மாகாணங்களுக்கு கடத்தப்படுகிறது. இது தொடர்பில் பல ஆய்வுகள் விசாரணைகள் மேற்கொண்டு வருகிறோம். சிலரை கைது செய்யக்கூடியதாக இருக்கிறது. பெரும்புள்ளிகள் அகப்படவில்லை. எனினும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றோம். பொதுமக்கள் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் பொது அமைப்புகள் சார்பில் கலந்து கொண்டிருந்த ஒருவர் கருத்து தெரிவிக்கையில்-

சில கிராம் கணக்கில் வைத்திருப்பவர்களையே கைது செய்துள்ளார்கள். பெரும் முதலைகள் எவரும் கைது செய்யப்படவில்லை. அப்பாவிகளை கைது செய்து விட்டு கைது செய்கிறோம் என கூறக்கூடாது. போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் தொடர்பு இருப்பதாக பொது மக்கள் தரப்பில் கதைகள் வருகின்றன. எனவே பொலிஸார் அவதானமாக செயல்பட்டு வடக்கில் போதைப்பொருளை தடுப்பதற்கு பொலிஸார் பூரண ஒத்துழைப்பை தரவேண்டும்-என்றார்.

(அ)

# காங்கேசன்துறையில் உயிர்காப்பு நீச்சல் பிரிவு



யாழ்ப்பாணம், ஏப். 20

காங்கேசன்துறை பகுதியில் பொலிஸாரினால் பிராந்திய உயிர்காப்பு நீச்சல் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை கடற்கரைப் பகுதியில் உருவாக்கப்பட்ட நிலையத்தை வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக்.சி.ஏ.தனபால நேற்று திறந்துவைத்தார்.

கடற்கரையில் குளிக்கும் போதும், விளையாட்டுக்களில் ஈடுபடும்போதும் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் அசம்பாவிதங்களைத் தடுக்கும் விதமாக குறித்த பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த பகுதியில் இடம்பெறும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸ் காவலரணும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# யாழில் அன்னை பூபதியின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல்



யாழ்ப்பாணம், ஏப். 20

தியாகத்தாய் அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தலின் இறுதிநாள் நினைவுதினம் யாழ்ப்பாணத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலிபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக இந்த நினைவேந்தல் நடைபெற்றது.

அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் வடக்கு கிழக்கு மற்றும் புலம்பெயர் தேசங்களிலும் நடைபெற்று வருகின்றது. இதன் அங்கமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாண தலைமை அலுவலகத்தில் நினைவுநாள் தொடர்ச்சியாக அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. இறுதிநாள் நிகழ்வுக்காக ஊர்திப் பவனியொன்றும் இங்கிருந்து மட்டக்களப்புக்கு சென்றிருந்தது.

இதன் தொடராக நினைவு நாளின் இறுதிநாளான நேற்று அக் கட்சியின் ஏற்பாட்டில் நல்லூரில் கொட்டகை அமைத்து நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது பொதுச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் அரசியல் கட்சி உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# சுதந்திரக் கட்சி பிரச்னைகளை தீர்ப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரமில்லை!

கொழும்பு, ஏப். 20

சுதந்திரக் கட்சிக்குள் நிலவும் உள்ளக பிரச்னைகளை தீர்ப்பதற்கு தமது ஆணைக்குழுவுக்கு சட்டரீதியான அதிகாரம் இல்லை என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அக்கட்சியின் அரசியல் குழுவினால் தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு வழங்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் ஆவணங்கள் தொடர்பாக அதன் உறுப்பினர்களால் நேற்று முன் தினம் கலந்துரையாடப்பட்ட போதே இந்ந விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான சுதந்திரக் கட்சியின் குழுவொன்று, நிர்வாக சபைக் கூட்டத்தை கூட்டி, பதில் செயலாளர், தேசிய அமைப்பாளர் உள்ளிட்ட பதவிகளுக்கு உறுப்பினர்களை நியமித்துள்ளது.

அதன்படி, பதில் தலைவராக நிமல் சிறிபாலடி சில்வா தெரிவு செய்யப்பட்டார்.

இதையடுத்து, இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடமும் கையளிக்கப்பட்டது.

எனினும், இந்நியமனம் சட்டவிரோதம் என மைத்திரி தரப்பு விளக்கமளித்துள்ளது.

இந்த நிலையிலேயே கட்சி யாப்பின் அடிப்படையில் புதிய நியமனம் செல்லுபடியாகுமா, தேர்தல்கள் ஆணைக்குழு எந்த தரப்புடன் அதிகாரப்பூர்வமாக தொடர்புகொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய தேர்தல் ஆணைக்குழு நேற்று முன் தினம் கூடியிருந்தது.

இதன்போது, நீதிமன்றத்தின் ஊடாகவே கட்சியின் உள்ளக பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(அ)

# அரிசி ஏற்றிச்சென்ற லொறி விபத்து

கொழும்பு, ஏப். 20

பதுளை-வெலிமடை வீதியில் அடம்பிட்டிய வெல்லவெல பகுதியில் நேற்றுக் காலை லொறியொன்று வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்து பதுளை போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறையிலிருந்து வெலிமடை நோக்கி அரிசி ஏற்றிச் சென்ற குறித்த லொறியில் மூன்று பேர் பயணித்ததாகவும், வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் லொறி கவிழ்ந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

லொறி விபத்தையடுத்து குறித்த வீதியின் போக்குவரத்து ஒருவழி போக்குவரத்தாக மட்டுப்படுத்தப்பட்டது. பண்டாரவளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் களுபஹனவின் பணிப்புரையின் பேரில், அடம்பிட்டிய பொலிஸ் நிலைய பொ சஞ்சீவ சேந்தநாயக்க தலைமையில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ரணிலுக்கே ஆதரவு!

## அறிவித்தார் டயானா கமகே

கொழும்பு, ஏப்., 20

நாட்டின் தற்போதைய முறைமைக்கமைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியம் என்று இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார்.

அத்துடன், ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே தனது ஆதரவு எனவும் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்நாட்டை மீட்ககூடிய ஒருவருக்கே ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு வழங்கப்படும். அதனை ரணில் விக்கிரமசிங்க செய்துவருகின்றார். எனவே, அவருக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். மக்கள் ஆணையுடன் அவர் பதவிக்கு வரவேண்டும். நாடாளுமன்ற வாக்கெடுப்பில் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு வழங்கியமை மகிழ்ச்சியளிக்கின்றது.

அடுத்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி பக்கமே நிற்பேன். ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்தால்கூட ஏற்கப் போவதில்லை-என்றார்.

# ஈரான் உட்பட அரபு நாடுகளுடன் உறவை வலுப்படுத்தவேண்டும்!

கொழும்பு, ஏப். 20

எவ்வித உள்நோக்கமும் இன்றி, இலங்கையின் வளங்களை குறிவைக்காமல் இலங்கைக்கு உதவிகளை வழங்கிவரும் ஈரான் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளுடன் அரசு உறவை வலுப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான்-

அரபுலகுடன் இலங்கை கடந்தகாலங்களில் சிறந்த நட்புறவை பேணியது. இலங்கையின் அபிவிருத்திக்கு அரபுலகம் உதவிகளை வழங்கியது. வட்டி இல்லாத கடன்கூட வழங்கப்பட்டுள்ளது. மத்திய கிழக்கில் பல பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

இந்நிலையில் ஈரான் ஜனாதிபதி இலங்கை வருவது நல்லது.

எவ்வித உள்நோக்கமும், நிகழ்ச்சி நிரலும் இன்றி உதவிகளை வழங்கும் இவ்வாறான நாடுகளுடன் உறவை வலுப்படுத்துவது எமது நாட்டின் பொருளாதாரத்துக்கு பலமாக அமையும். உதவிகள்மூலம் அந்த துறைமுகத்தை தா, இந்த துறைமுகத்தை தா என அவர்கள் கோரப்போவதில்லை-என்றார். (அ)

# தெற்கு அரசியல்வாதி ஒருவர் 70 கோடிக்கு வாங்கிய காணி!

## சிங்களப் பத்திரிகை வெளிப்படுத்திய தகவல்

கொழும்பு, ஏப். 20

**தெற்கை மையமாகக் கொண்ட பிரபல அரசியல் குடும்பமொன்றின் மூலம் வெளிப்படைத் தன்மையற்ற முறையில் தலைநகர் கொழும்பில் 70 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான காணிகளை விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாகக் கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள நாளதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பில் நிதிச்சலவை சட்டத்தின் கீழ் விசாரணைகளை நடத்தக் கோரி இலஞ்சம்-ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவில் எதிர்வரும் வாரத்தில் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் ஊழல் எதிர்ப்பு அமைப்பின் அழைப்பாளர் வசந்த சமரசிங்க கருத்து வெளியிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் கோட்டை, தூவ பாதையில் 54 பேர்ச்சஸ் காணியை விலைக்கு கொள்வனவு செய்த சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

அதன் தொடர்ச்சியாக இந்த அதிசொகுசு வீடுக் காணியுடன் இணைந்து காணப்படும் நான்கு காணிகளையும் விலைக்கு வாங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவத்துக்கான சாட்சிகள் தம்மிடம் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2006 ஆம் ஆண்டு நிதிச்சலவை சட்டத்தின்படி, இந்த காணிகளின் உரிமையாளர்கள் யார்? இந்தக் காணிகள் யாருடைய பெயரில் விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டன என்பதை உடனடியாக ஆராய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்கு உள்ளான கோட்டை தூவ பாதையில் 54 பேர்ச்சஸ் காணிக்கு மேலதிகமாக அதன் அருகில் 18 பேர்ச்சஸ் (1 பேர்ச்சஸ் 4 மில்லியன் ரூபாய் அடிப்படையில்) 72 மில்லியன் ரூபாய் பெறுமதியான காணியும், 54 பேர்ச்சஸ் (1 பேர்ச்சஸ் 4 மில்லியன் ரூபாய் படி) 216 மில்லியன் ரூபாய் பெறுமதியான காணியும், 18 பேர்ச்சஸ் (1 பேர்ச்சஸ் 4 மில்லியன் ரூபாய் படி) 72 மில்லியன் ரூபாய் பெறுமதியான காணியும், 30 பேர்ச்சஸ் (1 பர்சஸ் 3.5 மில்லியன் ரூபாய்படி) 105 மில்லியன் ரூபாய் பெறுமதியான காணியும் இவற்றுள் உள்ளடங்குவதாக அவர் விவரங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்.

அதன்படி, இதற்கு முன்னர் விலைக்கு வாங்கிய 54 பேர்ச்சஸ் காணியில் கட்டடப்பட்ட வீட்டில், பாதுகாப்பு சேவைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், குளிரூட்டப்பட்ட அறைகளுள் 12 நாய்களை சொகுசாக வளர்த்து வருவதாகவும் நீச்சல் தடாகம் உட்பட அதிசொகுசு வீடொன்று இங்கு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# தமிதா அபேரத்ன மீது மற்றொரு முறைப்பாடு

கொழும்பு, ஏப். 20

சிறையில் உள்ள நடிகை தமிதா அபேரத்ன மற்றும் அவரது கணவர் மீது பேலியகொடை குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு மற்றுமொரு முறைப்பாடு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

நடிகையும் கணவரும் குறித்த நபரிடம் இருந்து 34 இலட்சம் ரூபாவை பெற்றுக் கொண்டு 4 இலட்சம் ரூபாவை திருப்பிக் கொடுத்துள்ளனர்.

இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தமிதா அபேரத்ன மற்றும் அவரது கணவருக்கு எதிராக நீதிமன்றில் உண்மைகளை அறிக்கையிட்டு சட்ட நடவடிக்கை எடுப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை நிதி மோசடி குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நடிகை தமிதா அபேரத்னவையும் அவரது கணவரையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறுவர் இல்லங்களில் 9,147 பேர்!

கொழும்பு, ஏப். 20

நாடளாவிய ரீதியில் உள்ள 354 சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் தற்போது 9,147 சிறுவர்கள் காணப்படுவதாக நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் தற்போது சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாற்றீடான பாதுகாப்பின் கீழ், சிறுவர்கள் சிறுவர் இல்லத்தில் சேர்க்கப்படுவதுடன், சிறுவர்கள் குடும்பமொன்றின் கீழ் வளர்வது அவசியமானது என நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் கூறியுள்ளது.

அத்தோடு, சிறுவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் பொருத்தமான பாதுகாவலரின் குடும்பத்தின் கீழ் சிறுவர்கள் வளர வேண்டும் என்பதற்காக அதிகாரிகள் பணியாற்றுவதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)




# பாலித தேவரப்பெருமவுக்கு வவுனியா இளைஞர் அஞ்சலி

வவுனியா, ஏப். 20

மின்சாரம் தாக்கி மரணமடைந்த முன்னாள் பிரதி அமைச்சர் பாலித தேவரப்பெருமவுக்கு மூவின இளைஞர்களும் இணைந்து வவுனியாவில் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

வவுனியா, கந்தசாமி கோவில் வீதியில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இந்நிகழ்வு இடம்பெற்றது. கோவிட் பெருந்தொற்று காலத்திலும், வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட நேரத்தில் இன, மதங்களைக் கடந்து முன்னாள் பிரதி அமைச்சர் பாலித தேவரப்பெரும பணியாற்றி இருந்தார்.

இதனால் மக்கள் மனங்களில் அவர் சிறந்த அரசியல்வாதியாக இடம்பிடித்திருந்த நிலையில் மின்சாரம் தாக்கி மரணமடைந்தார்.

இந்நிலையில் வவுனியா இளைஞர்களும் அவரது படத்திற்கு மலர் தூவி, தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். இதில் தமிழ், சிங்கள், முஸ்லிம் இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

# நச்சுப் போதைப்பொருட்களுடன் 10 பெண்கள் உட்பட 726 பேர் கைது!

கொழும்பு, ஏப். 20

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது நச்சுத்தன்மைமிக்க போதைப்பொருட்களும் 10 பெண்கள் உட்பட 726 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது கைது செய்யப்பட்ட 25 சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருட்களுக்கு அடிமையான 6 சந்தேக நபர்களை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச்சுற்றிவளைப் பின்போது 176 கிராம் ஹெரோயின், 83 கிராம் ஐஸ், 201 கிராம் கஞ்சா, 10 கிராம் ஹெரோயின் மற்றும் 74 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# மரண தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் 35 வருடங்களாக தலைமறைவானவர் கைது!

கொழும்பு, ஏப். 20

நீதிமன்றில் மரண தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் 35 வருடங்களாக தலைமறைவாக இருந்த நபர் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றவாளியான நபர் மின்சார சபையின் பொறியியலாளர் ஒருவரைக் கொடூரமாக கொன்றமை தொடர்பிலேயே மரண விதிக்கப்பட்டவராவார்.

சந்தேக நபர் 68 வயதுடையவர் எனவும், அவர் தனது தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழில் தனது அடையாளத்தை மாற்றியமைத்துள்ளதாகவும் விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பிரதான சந்தேகநபரின் மனைவியும் மறைந்திருந்த நிலையில் பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி கைது செய்யப்பட்டார். (அ)

# போதைப்பொருள் மாத்திரைவைத்திருந்த இருவர் கைது!

கொழும்பு, ஏப். 20

போதைப்பொருள் மாத்திரைகளை வைத்திருந்த இருவர் விசேட அதிரடிப்படையினரால் புல்மோட்டை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

1,229 சட்டவிரோத போதைப் பொருள் மாத்திரைகளை தம் வசம் வைத்திருந்த குற்சாட்டில் இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக புல்மோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (அ)

# மனைவியைக் கூரிய ஆயுதத்தினால் தாக்கிய கணவனுக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், ஏப். 20

அராலியில் மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கி படுகாயத்தை ஏற்படுத்திய கணவன் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த கணவன்-மனைவி ஆறு வருடங்களாக பிரிந்து இருக்கின்றனர். இந்நிலையில் வன்னியில் வசிக்கும் மனைவி, யாழ்ப்பாணம் - அராலியில் உள்ள அவரது அக்காவின் வீட்டுக்கு வந்து செல்வது வழமை.

இந்நிலையில் தாக்குதலுக்கு உள்ளான பெண், புது வருட கொண்டாட்டத்துக்காக சகோதரி வீட்டுக்கு வந்திருந்த நிலையில் கணவனால் இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. படுகாயமடைந்த மனைவி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

கைது செய்த சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ)

# முதியவர் வெட்டிக்கொலை!

கொழும்பு, ஏப். 20

எம்பிலிபிட்டிய - மடுவன் வெல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வாடகைக்கு தங்கியிருந்த நபரொருவர், கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது. காலி பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயது நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

வாடகை வீட்டில் தனியாக வசித்து வந்த குறித்த நபர், தென்னை நார் உற்பத்தித் தொழில் செய்து வந்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் எம்பிலிபிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தரமற்ற ஹீமோகுளோபின் மருந்து சந்தைக்கு வரக்கூடிய ஆபத்துநிலை!

## ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் அதிகாரிகள் பெரும் பற்றாக்குறை

கொழும்பு, ஏப். 20

**இலங்கைத் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் சட்ட அமுலாக்க அமைப்பில் இந்த வாரம் ஒரு அதிகாரி மாத்திரமே கடமையாற்றவுள்ளார்.**

**இதன் காரணமாக எதிர்காலத்தில் மனித ஹீமோகுளோபின் போன்ற தரமற்ற மருந்துகள் சந்தைக்கு வரக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக எச்சரிக்கப்படுகிறது.**

இலங்கைத் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் சட்ட அமுலாக்கப் பிரிவு தலைமைக் காரியாலயத்தில் குறைந்தது 20 உணவு மற்றும் மருந்துப் பரிசோதகர்கள் இயங்கவேண்டும். ஆனால், கடந்த இரண்டு மாதங்களாக அனுபவமிக்க இரண்டு அதிகாரிகளுடன் மட்டுமே இந்த தலைமைக் காரியாலயம் இயங்கி வருகிறது.

இவ்வாறிருக்க இலங்கைத் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் சட்ட அமுலாக்கப் பிரிவின் தலைமைக் காரியத்தில் இருந்த இரண்டு அதிகாரிகளில் ஒருவர் வேலையிலிருந்து ஓய்வுபெற்ற நிலையில், கடந்த திங்கட்கிழமையிலிருந்து ஒரு அதிகாரி மாத்திரமே செயல்பட்டு வருகிறார்.

இந்த இலங்கைத் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையானது, 2015ஆம் ஆண்டில் சட்டம் எண்.5ஆல், மருத்துவப் பொருட்களின் பாதுகாப்பு, தரம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றின் தர நிலைகளை உறுதி செய்தல், சுகாதாரத்தை மேம்படுத்தல் பாதுகாத்தல், மருந்துகள், மருத்துவ சாதனங்கள், தயாரிப்புகளின் எல்லைக்கோடுகள், மருத்துவ பரிசோதனைகள், அழகுசாதனப் பொருட்களின் தரம் போன்றவற்றை பரிசோதிக்கும் அதிகாரம் பெற்றுள்ளது.

இந்நிலையில், தற்போது இந்த சபையில் பணியாற்றும் ஒரு அதிகாரியும் வருகின்ற ஜூன் மாதம் ஓய்வு பெறவுள்ளார் நிலையில், புதிய உணவு மற்றும் மருந்து ஆய்வாளர்களை நியமிக்கவோ அல்லது மீதமுள்ள தொழில் வெற்றிடங்களை நிரப்பவோ அதிகாரிகள் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காததால் இந்தப் பிரிவு நெருக்கடியை சந்தித்து வருகிறது.

மாவட்ட அளவில் உணவு மற்றும் மருந்துப் பரிசோதகர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும் மருந்துச் சோதனைகளின் முக்கிய ஒழுங்குமுறை மற்றும் ஒருங்கிணைப்பு, தவறான மருந்து உற்பத்தியாளர்கள் குறித்த ஆய்வுகள் மேற்கூறப்பட்ட இரண்டு அதிகாரிகளின் தலைமையில் இடம்பெற்றது.

இலங்கைத் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம தலைமையிலான ஏழு பேர் கொண்ட குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. (அ)

# ஈரான் ஜனாதிபதியின் வருகை கடைசி நேரத்தில் இரத்தாகலாம்!

கொழும்பு, ஏப். 20

ஈரான் ஜனாதிபதியின் இலங்கைக்கான பயணம் கடைசிநேரத்தில் இரத்து செய்யப்பட வாய்ப்புள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியமும், அமெரிக்கத் தூதரகமும்தான் இந்த நாட்டை ஆள்கின்றன.

எனவே, ஈரான் ஜனாதிபதியின் இலங்கைக்கான பயணம் கடைசிநேரத்தில் இரத்துச் செய்யப்பட வாய்ப்புள்ளது.

உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை அங்கு ரார்ப்பணம் செய்வதற்கு ஈரான் ஜனாதிபதி இலங்கை வரவுள்ள நிலையில், அதற்கு அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாக வெளியாகும் தகவல்கள் தொடர்பிலேயே விமல் வீரவன்ஸ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உமாஓயா திட்டத்துக்கு ஈரான் உதவியுள்ளது. ஒரு நாட்டின் அபிவிருத்தித் திட்டத்துக்கு உதவி வழங்கினால் அதன் திறப்பு விழாவில் குறித்த நாட்டின் தலை வருக்கு பங்கேற்க உரிமை உள்ளது.

எனவே, நீங்கள் கூறுவது போல் அமெரிக்கா அழுத்தம் கொடுத்திருந்தால் பயணம் இறுதிநேரத்தில் இரத்து செய்யப்படலாம்-என்றார். (அ)

# பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டம்!

கொழும்பு, ஏப். 20

பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை குறைப்பதற்காக வெசாக் காலத்தில் மைத்திரி மாதம் என்ற தொனிப்பொருளில் பகிடிவதை எதிர்ப்பு வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, பல்கலைக்கழகங்களில் பகிடிவதை சுமார் 85 வீதத்தால் குறைந்துள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

பகிடிவதை தொடர்பான தண்டனைகளை அதிகரிப்பதன் மூலமும் விழிப்புணர்வை அதிகரிப்பதன் மூலமும் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# காலிமுகத்திடல் போராட்டத்தில் எரிக்கப்பட்ட பஸ்களுக்கு இழப்பீடு வழங்கப்படவேயில்லை

## தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 20

2022 ஆம் ஆண்டு காலிமுகத்திடல் போராட்டத்தின் போது பேருந்துகளுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்களுக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் நிதியமைச்சு உட்பட பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், எவ்வித இழப்பீடும் கிடைக்கவில்லை என குறித்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

அத்துடன், சில பஸ் உரிமையாளர்கள் பஸ்களை பழுதுபார்ப்பதற்காக காப்பீட்டுத் தொகையைப் பெற்றாலும், ஏனையவர்கள் அவ்வாறு பெறவில்லை எனவும், இதன் காரணமாக அவர்கள் தமது சொந்தப் பணத்தைச் செலவிட நேரிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், நிதி பிரச்னை காரணமாக பல பஸ்கள் பழுதுபார்க்கப்படாமல் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.



2022ஆம் ஆண்டு காலிமுகத்திடலில் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின் போது பல தனியார் பஸ்கள் சேதமாக்கப்பட்டதுடன், சில பஸ்கள் எரிக்கப்பட்டன.

அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்கும் அரசாங்க சார்பு குழுக்களை ஏற்றிச் செல்வதற்கு குறித்த பஸ்கள் பயன்படுத்தப்பட்டதாக கூறியே இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில், பேருந்துகள் வாடகைக்கு விடப்படும் சூழலில் பஸ்களை குறிவைப்பது நியாயமற்றது எனவும், இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தி இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

# வீசா கட்டண அதிகரிப்பால் சுற்றுலாத்துறை ஸ்தம்பிதம்

## முட்டாள்தனமான தீர்மானம் என்கிறார் சஜித்

கொழும்பு, ஏப். 20

வெளிநாட்டவருக்கான விஸா கட்டண அதிகரிப்பால் சுற்றுலாத்துறை ஸ்தம்பிதமடையும் அபாயம் காணப்படுவதாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலையொன்றிற்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுற்றுலாத்துறை பாரிய வளர்ச்சி கண்டுள்ள நிலையில் அரசாங்கம் திடீரென வெளிநாட்டவருக்கான விஸா கட்டணத்தை அதிகரித்துள்ளது.

சார்க் நாடுகளில் உள்ள வெளிநாட்டினருக்கு 20 முதல் 35 டொலர் வரையிலும், சார்க் அல்லாத நாடுகளில் உள்ள வெளிநாட்டினருக்கு 50 முதல் 75 டொலர் வரையிலான சேவைக் கட்டணமும், மேலதிக கட்டணமும் அறவிடப்படுகின்றது.



சார்க் அல்லாத நாடுகளின் வீசா கட்டணம் 100 டொலர்களைத் தாண்டியுள்ளதுடன் சார்க் நாடுகளுக்கான வீசா கட்டணம் 58 டொலர்களை தாண்டியுள்ளது இதன் காரணமாக வளர்ச்சி கண்டுள்ள சுற்றுலாத் துறை ஸ்தம்பிதமடையும் அபாயம் காணப்படுகின்றது.

ரஷ்யாவில் இருந்து ரெட் விங்ஸ் என்ற விமானம் மூலம் சுமார் 800 சுற்றுலாப் பயணிகள் நமது நாட்டிற்கு வருகை தரவிருந்தனர், என்றாலும் அதுவும் தற்போது கைவிடப்பட்டுள்ளது.

இது போன்ற முட்டாள்தனமான முடிவுகளை எடுப்பதற்கு முன்னர், உரிய ஆய்வு நடத்தப்பட்டதா என்பதை கருத்திற் கொள்ள வேண்டும்.

தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம், மாலைதீவு மற்றும் மாலி போன்ற நாடுகளுக்கு வீசா சலுகையும், வீசா கட்டணமும் முற்றிலும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நேரத்தில், இலங்கையில் 100 டொலருக்கும் அதிகமான தொகை அறவிடப்படுகின்றது. முட்டாள்தனமா தீர்மானமொன்றை அரசாங்கம் எடுத்துள்ளது-என்றார். (அ)

# சஜித் அணியிலிருந்து ரணில் பக்கம் தாவினார் உறுப்பினர்

கொழும்பு, ஏப். 20

ஐக்கிய மக்கள் சக்தியின் பெலியத்தைத் தேர்தல் தொகுதி அமைப்பாளர் அக்கட்சியில் இருந்து விலகி ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளாரென தெரிவிக்கப்படுகின்றது.

இவர், ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்தில் அக்கட்சியின் அங்கத்துவத்தை நேற்று முன் தினம் பெற்று கொண்டுள்ளார்.

முன்னாள் சுகாதார அமைச்சராக கடமையாற்றிய நந்தன அத்தப்பத்துவின் மகன், பிரவீன் ருவிந்த அத்தப்பத்து ஐக்கிய மக்கள் சக்தியின் பெலியத்தைத் தேர்தல் தொகுதிக்கான அமைப்பாளராக செயல்பட்டு வந்திருந்தார்.

இந்நிலையிலேயே, அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்திற்கு சென்று பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தனவிடம் கட்சியின் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# யுக்திய நடவடிக்கைக்கு ஜப்பான் அரசு பாராட்டு

கொழும்பு, ஏப். 20

இலங்கைப் பொலிஸாரின் யுக்திய சோதனை நடவடிக்கைக்கு ஜப்பானிய அரசாங்கத்தின் சார்பில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடெயாகி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸூடன் சந்திப்பொன்றை மேற்கொண்டார்.

பாதுகாப்பு அமைச்சு கட்டடத்தில் அமைந்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இதன்போது போதைப் பொருள் ஒழிப்புத்திட்டத்தை முன்னிலைப்படுத்தி இலங்கைப் பொலிஸார் மேற்கொண்டு வரும் "யுக்திய" விசேட சோதனை நடவடிக்கை குறித்து ஜப்பானியத் தூதுவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பொலிஸாரின் பிரஜைகள் பொலிஸ் பிரிவின் செயற்பாடுகள் குறித்தும் அமைச்சர் டிரான் அலஸ் இதன் போது ஜப்பானிய தூதுவருக்கு விளக்கமளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

ஈழநாடு



# கல்முனை என்பது தமிழரின் தாயகம்

## கோடீஸ்வரன் தெரிவிப்பு

காரைதீவு, ஏப். 20

"கல்முனை என்பது தமிழர்களின் தாயகம்,தமிழர்களின் அடையாளம். அதனை யாரும் மறந்துவிட முடியாது .நீங்கள் மறக்கவும் கூடாது."

-இவ்வாறு அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் நற்பிட்டிமுனையில் குறிப்பிட்டார்.



நற்பிட்டிமுனை சூப்பர் ஸ்டார் விளையாட்டு கழகத் திற்கான சீருடை வெளியிட்டு நிகழ்வு நேற்று முன்தினம் விளை யாட்டு கழகத் தலைவர் ஐ. கமல் ராஜ் தலைமையில் நடைபெற்ற போது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரி விக்கையில்,

பிரதேச செயலகம் என்பது தமிழர்களின் அடிப்படை உரி மையாக இருக்கிறது.

எமது அடையாளத்தை பாது காப்பதில் இடம் முக்கியமானது. எமக்கான அடையாளம் இருக்க வேண்டுமாக இருந்தால் எமது இடம் பறிபோகக் கூடாது.

இதை விட்டால் நாளை கல் முனைல் தமிழர்கள் வாழ்ந்தார் கள் என்ற அடையாளமே இல் லாமல் போய்விடும்.

ஒரு 30, 40 வருடங்களுக்கு முன் தள்ளிப் பார்ப்போமா னால் பிரதேசம் எல்லாம் தமிழர் களின் பிரதேசமாக இருந்தது. கல்முனை குடி என்று அன்று இருந்தது இன்று கல்முனையாக மாறி இருக்கின்றது. இவையெல் லாம் எமக்கெதிரான திட்ட மிட்ட சூழ்ச்சிகள். சதி நடக்கிறது.

உண்மையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பாக முதன் முதலாக பாராளுமன்றத்தில் குரல் கொடுத் தவன் நானேதான். ஐக்கிய நாடு சபையின் 51வது கூட்டத் தொடரிலே பிரச்சனையை முன்வைத்தவனும் நானே. இதை யாரும் மறுக்க முடியாது.

வெகு விரைவில் இது விட யம் தொடர்பாக ஜனாதிபதி யோடும் பிரதமரோடும் நாங் கள் தொடர்பு பட்டு பேச இருக் கின்றோம்.

நிபந்தனையோடு எமது ஆத ரவை வழங்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

எமது பிரதேச செயலகத் துக்கு என்னென்ன அதிகாரங் கள் இருக்க வேண்டுமோ அவற் றையெல்லாம் தர வேண்டும் என்று நாங்கள் நிபந்தனை விதிக்க இருக்கின்றோம். அது மாத்திரமல்ல ஏலவே ஆளணி யின் படி கணக்காளர் நியமிக் கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர் வரவில்லை.திட் டமிட்ட சதி நடக்கின்றது. அதனால் அது இழுபடுகின்றது.

அந்த சூழ்ச்சிகளை எல்லாம் நாங்கள் ஒன்றாகி முறியடிக்க வேண்டும். அதற்காக உங்களது ஒத்துழைப்பும் தேவை-என்றார்.

# காத்தான்குடி கடற்கரையில் பெண் ஒருவரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஏப். 20

மட்டக்களப்பு - காத்தான் குடி பொலிஸ் பிரிவிற்குட் பட்ட ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவிற்குள் அடங்கும் பாலமுனை கடற்கரையோரம் பெண் ஒருவரின் சடலம் மீட் கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் மதியம் 12 மணியளவில் பாலமுனை கடற்கரையோரம் கரை ஒதுங் கிய குறித்த சடலம் இதுவரை அடையாளம் காணப்பட வில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 55 வயது மதிக்கத் தக்க குறித்த பெண் எவ்வாறு மரணமானார் என்பது குறித்த விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் தீவிர விசாரணை களை மேற்கொண்டு வருகின் றனர்.

(அ)

# சிறப்பாக இடம்பெற்றது மடத்தடி மீனாட்சி அம்மன் பாற்குட பவனி!



அம்பாறை, ஏப். 20

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத் தடி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் இரண்டாவது வரு டாந்த அலங்கார உற்சவத்தின் பாற்குட பவனி நேற்று வெள் ளிக்கிழமை சிறப்பாக நடைபெற் றது.

ஆலயத்துக்கு மேற்கு புறமாக உள்ள சிவன் ஆலயத்தில் விசேட கிரியைகள் பூசை இடம்பெற்று பாற்குடபவனி ஆரம்பமானது.

இதேவேளை, உற்சவகால பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமை யில் ஆலய குரு சிவஸ்ரீ ச. கோவர்த்தன சர்மா சமுகத்தில் வருஷாபிஷேக கிரியைகள் நடை பெற்று வருகின்றன.

இவ்வாறு தொடர்ச்சியாக ஒன்பது தினங்கள் பகல் அலங் கார உற்சவ திருவிழாக்கள் இடம் பெற்று எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சித்ரா பௌர்ணமி அன்று தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது.

இந்த பத்து நாள் அலங்கார உற்சவ திருவிழாக்காலங்களில் காலை 10 மணிக்கு கும்ப பூஜை யுடன் ஆரம்பமாகி பகல் ஒரு மணிக்கு அலங்கார உற்சவ பிரதான பூஜை, அம்பாளின் வீதியுலா இடம் பெறும்.

(அ)



# திருகோணமலை, கிண்ணியா பிரதேச மக்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள்

திருமலை, ஏப். 20

திருகோணமலை மாவட்டத் தின் கிண்ணியா பிரதேச மக்க ளுக்கு கடந்த 30 முதல் 40 வரு டங்களுக்கும் மேலாக கோரிக்கை விடுக்கப்பட்டு வரும் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி தலைமையில் கிண்ணியா பிர தேச செயலகத்தில் நடைபெற் றது.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லா, கிழக்கு மாகாண காணியமைச் சின் செயலாளர் எஸ். கோபால ரத்னம் ஆகியோர் கலந்து கொண் டனர்.

(அ)

# இலங்கை நூலக சங்கத்தின் 18ஆவது தேசிய ஆய்வு மாநாடு

அம்பாறை, ஏப். 20

இலங்கை நூலக சங்கத்தின் 18 ஆவது தேசிய ஆய்வு மாநாடு, தென்கிழக்கு பல்கலைக்கழகத் தின் தொழில்நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில், நூலக சங்க ஆய்வுக்குழுவின் ஒருங்கி ணைப்பாளரும் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகருமாகிய கலாநிதி முஹம் மட் மஜீட் மஸ்றுபா தலைமை யில் இடம்பெற்றது.

இம்முறை 18 ஆவது தேசிய ஆய்வு மாநாடு "நூலகங்கள் மற்றும் சமூகத்தின் இணைப்பு: சமூக விரிவாக்கல் சேவைகள் மூலம் பிணைப்பினை வலுப்ப டுத்தல்" எனும் தலைப்பின் கீழ் இடம்பெற்றது.

இலங்கை நூலக சங்கத்தின் தற்போதைய தலைவர் பிருத்தி லியனகே மற்றும் முன்னாள் தலைவர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ ஆகியோரின் நெறிப்படுத்தல்க



ளில் இவ் ஆய்வு அமர்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதி யாக தென்கிழக்கு பல்கலைக்க ழக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலா நிதி எம்.எம். பாஸில், முதன்மை பேச்சாளராக பேராதனை பல்க லைக்கழக நூலகர் ஆர். மகேஸ் வரன், கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் என். மணிவண்ணன், கிழக்கு பல்கலைக்கழக நூலகர் கலாநிதி டபிள்யூ. ஜெ. ஜெய ராஜ், தென்கிழக்கு பல்கலைக்க ழக தொழிநுட்பவியல் பீட பீடா திபதி கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் ஆகியோர் கலந்து சிறப் புச் சொற்பொழிவாற்றினர்.

இம்மாநாட்டில் பொது நூல கர்கள், பாடசாலை நூலகர்கள், விசேட நூலகர்கள் மற்றும் பல்க லைக்கழக நூலகர்கள் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். அந்த வகையில் இம் முறை தமிழ்மொழி மூலம் கிழக்கு மாகாணத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் குறித்த நிகழ்வு இடம்பெற்றது வர லாற்று சிறப்புமிக்க ஒர் நிகழ்வு என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஈரான் மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்!

## பல விமான சேவைகள் ரத்து

**தெஹ்ரான், ஏப். 20**

**சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் தாக்கப்பட்டதற்கு பதிலடியாக, இஸ்ரேல் மீது ஏவுகணைகள், ஆளில்லா விமானங்களை கொண்டு ஈரான் தாக்குதல் நடத்தியது.**



இந்நிலையில், ஈரான் மீது ஏவுகணைகளை வீசி இஸ்ரேல் பதில் தாக்குதல் நடத்தியுள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஈரானின் இஸ்பஹான் நகரில் உள்ள விமானப்படைத் தளத்தில் வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டதற்கான சத்தம் கேட்டதாக உள்ளூர் ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. இதன் காரணமாக ஈரானின் மேற்கு பகுதியில் வான்வெளி மூடப்பட்டுள்ளது. பல விமானங்கள் திருப்பிவிடப்பட்டு உள்ளன.

ஈரான் மீதான இஸ்ரேலின் பதிலடி தாக்குதல் மோசமாக இருக்கும் பட்சத்தில் அது மூன்றாம் உலகப்போருக்கு வித்திடுமோ என்ற கேள்விகளை எழுப்பி உள்ளது. (அ)

# ரஷ்யாவின் பொருளாதாரம் அதிவேகமாக வளர்ச்சி

## சர்வதேச நாணய நிதியம்



*லண்டன், ஏப். 20*

உலகின் அனைத்து முன்னேறிய பொருளாதாரங்களையும் விட இந்த ஆண்டு ரஷ்யாவின் பொருளாதாரம் வேகமாக வளரும் என சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் இந்த ஆண்டு ரஷ்ய பொருளாதாரம் 3.2 வீதம் வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கிறது என்றும் இது பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியை விட கணிசமாக வேகமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியம், எண்ணெய் ஏற்றுமதி நிலையாக இருப்பதாலும், உயர்வாக இருப்பதாலும், அரசாங்க செலவினங்களின் வளர்ச்சிக்கு பங்களிக்கிறது என கூறுகிறது.

மொத்தத்தில், ரஷ்யப் பொருளாதாரம் உலகப் பொருளாதாரத்தை எதிர்கொள்வதற்கான சிறந்த நிலைப்பாட்டில் இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் மேலும் தெரிவித்துள்ளது.

மேலும் ரஷ்யா வங்கி அமைப்பை பெருமளவில் மீள் தன்மையுடன் வைத்திருக்க முடிந்ததுடன் உலகளாவிய மந்தநிலையைத் தவிர்க்க முடிந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# என்னை தாக்கியவரை மன்னித்துவிட்டேன்!

## கத்திக்குத்திற்கு இலக்கான அவுஸ்திரேலிய ஆயர்




*சிட்னி, ஏப். 20*

சிட்னி தேவாலயத்தில் தன் மீது தாக்குதலை மேற்கொண்ட இளைஞனை மன்னித்துள்ளதாக ஆயர் மரி மார் இமானுவேல் தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலிற்கு பழிவாங்கும் விதத்தில் செயற்படவேண்டாம் - இயேசுவை போல நடந்துகொள்ளுங்கள் என ஆயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆயர் மருத்துவமனையிலிருந்தபடி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

தனது வேகமாக குணமடைந்து வருவதாக தெரிவித்துள்ள அவர், தன்னை தாக்கியவருக்காக பிரார்த்திப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையில் யார் ஈடுபட்டிருந்தாலும் அவரை நான் மன்னிக்கின்றேன். நீங்கள் எனது மகன். நான் உங்களை நேசிக்கின்றேன். உங்களுக்காக நான் பிரார்த்திக்கின்றேன் என ஆயர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தனது ஆதரவாளர்கள் பதில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு பதில் பிரார்த்தனைகளில் ஈடுபடவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கவலைப்படவேண்டிய கரிசனை கொள்ளவேண்டிய தேவையில்லை. கர்த்தர் எங்களிற்கு போரிடவோ பதில் நடவடிக்கையில் ஈடுபடவோ கற்றுத்தரவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# செல்வாக்குள்ள 100 மனிதர்களில் ஒருவராக காசா படப்பிடிப்பாளர்!




*லண்டமன், ஏப். 20*

2024ஆம் ஆண்டு செல்வாக்கு செலுத்திய 100 நபர்களில் ஒருவராக பாலதீன புகைப்படப்பிடிப்பாளர் மொட்டாஸ் அசைசாவை ரைம்ஸ் தெரிவுசெய்துள்ளது.

இது குறித்து ரைம்ஸ் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 108 நாட்களாக அவரது சொந்த ஊரான காசா குறித்த உலகின் குரலாகவும் பார்வையாகவும் அசைசா விளங்கினார்.

கமராவுடனும் பிரெஸ் என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ஜக்கெட்டுடனும் அவர் நான்கு மாதங்களாக இஸ்ரேலின் குண்டுவீச்சின் கீழ் வாழ்க்கை வீடுகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் நேசத்துக்குரியவர்களை இழந்து கதறும் பெண்கள் இடிபாடுகளின் கீழ் சிக்கி உயிரிழந்த நபர் போன்ற விடயங்களை பதிவு செய்தார்.

காசாவிற்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்களுக்கு சவாலாக அமையக்கூடிய விதத்தில் காணப்பட்ட அவரது படங்கள் காசாவில் என்ன நடைபெறுகின்றது என்பதை உலகிற்கு தெரிவித்தன.

அவர் பெரும் ஆபத்தின் மத்தியிலேயே தனது பணியை முன்னெடுத்தார்.

ஒக்ரோபர் 7ஆம் திகதி முதல் 98 பத்திரிகையாளர்கள் காசாவில் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

1992ஆம் ஆண்டுமுதல் பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதலை பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான குழு பதிவு செய்ய தொடங்கியது முதல் பத்திரிகையாளர்களிற்கு மிகவும் ஆபத்தான ஆண்டாக இந்த ஆண்டே காணப்பட்டுள்ளது.

காசாவிலிருந்து ஜனவரியில் வெளியேறியது முதல் அவரது பணி இந்த நெருக்கடி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும் சர்வதேச கவனத்தை ஈர்ப்பதாகவும் மாறியுள்ளது.

காசாவில் நடைபெறுவது உங்களின் ஊடங்களுக்கான ஒரு உள்ளடக்கடம் இல்லை அங்கு என்ன நடைபெறுகின்றது என்பதை நாங்கள் உங்கள் விருப்பங்களை கருத்துக்களை பெறுவதற்காக தெரிவிக்கவில்லை நாங்கள் நீங்கள் செயல்படுவதற்காக காத்திருக்கின்றோம் இந்த யுத்தத்தை நாங்கள் நிறுத்தவேண்டும் என்கின்றார் அவர். (அ)



# சிட்னி வணிக வளாக தாக்குதலில் துணிச்சலாக செயல்பட்டவருக்கு அவுஸ்திரேலிய நிரந்தர வீசா

*சிட்னி, ஏப். 20*

பொன்டி வணிக வளாகத்தில் கத்திக்குத்திற்கு இலக்காகிய பாகிஸ்தானை சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு நிரந்தர விசாவை வழங்கவுள்ளதாக அவுஸ்திரேலிய பிரதமர் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் பிரஜைக்கு அவுஸ்திரேலியா அவ்வாறான நிரந்தர விசாவை வழங்கியுள்ள நிலையிலேயே அன்டனி அல்பெனிஸ் இதனை தெரிவித்துள்ளார்.

பொன்டி வணிகவளாக தாக்குதலின்போது துணிச்சலை வெளியிட்டவர்கள் அனைவரும் இருளின் மத்தியில் வெளிச்சமாக திகழ்ந்தவர்கள் என தெரிவித்துள்ள அன்டனி அல்பெனிஸ், அவர்கள் அவுஸ்திரேலியாவின் பாராட்டுகளை பெற வேண்டியவர்கள் என தெரிவித்துள்ளார்.

முகமட் டாஹாவுக்கு நிரந்தர வதிவிடத்தை அல்லது விசா நீடிப்பை வழங்குவது குறித்து அரசாங்கம் சிந்திக்கும் என பிரதமர் தெரிவித்துள்ளார். (அ)

# கடற்றொழிலாளர்களுக்காக புதிய சட்டமூலம் விரைவில்!

## யாழ்ப்பாணத்தில் நேற்று கூடி ஆராய்வு



**யாழ்ப்பாணம், ஏப். 20**

**கடற்றொழிலாளர்களுக்கான புதிய சட்டமூலமொன்றை தயாரிப்பதற்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.**

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதி மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சுதாகரனின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில், புதிய சட்டமூலம் தொடர்பாக கடற்றொழில் திணைக்கப் பணிப்பாளர் நாயகத்துடன் இணைந்து கடற்றொழில் அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் தவராசா வளவாளராக கலந்து கொண்டு இது தொடர்பான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்.

குறித்த கலந்துரையாடலில் அமைச்சின் துறை சார் உத்தியோகத்தர்கள், அமைச்சின் சட்ட ஆலோசகர் மற்றும் துறைசார் வல்லுநர்கள், சமாச உறுப்பினர்கள், யாழ். மாவட்ட கடற்றொழில் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மீன்பிடி நடவடிக்கை உரிமம் வழங்கலில் உள்ள பொதுவான கோட்பாடுகள், மீன்பிடி உரிமத்தின் கால எல்லை, மீன்பிடி நடவடிக்கை உரிமங்களின் கைமாற்றம், வெளிநாட்டு கலன்கள் மூலம் இலங்கை நிலப்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுதலை தடை செய்தல் அல்லது கட்டுப்படுத்தல், இலங்கை நிலப்பரப்புகளில் மீன்பிடி செயல்பாடுகளை நடத்துவதற்கான மீன்பிடி உரிமத்தை புதுப்பித்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. (அ)





# மணற்காட்டில் மருதமடு அன்னை

வடமராட்சி, ஏப். 20

மருதமடு அன்னையின் திருச்சொரூபம் பருத்தித்துறை முனை தோமையப்பர் தேவாலயத்திலிருந்து நேற்று வெள்ளிக்கிழமை காலை 7:00 மணியளவில் புறப்பட்டு வடமராட்சி கிழக்கு மணல்காடு புனித அந்தோனியார் ஆலயத்தை காலை 8:20 மணியளவில் அடைந்தது.

பக்தர்களின் மிக பிரமாண்ட வரவேற்புடன் மருத மடு அன்னை பருத்தித்துறை முனை தோமையப்பர் ஆலயத்திலிருந்து புறப்பட்டு கற்கோவளம் வல்லிபுரம் ஊடாக மணல்காடு புனித அந்தோனியார் ஆலயத்தை சென்றடைந்தது. வழி எங்கும் கிறிஸ்தவ மக்கள் மட்டுமின்றி சைவ மக்களும் நிறைகுடம் வைத்து சைவ முறைப்படி வரவேற்றனர்.

வீதி எங்கும் நீலம், வெள்ளை கொடிகள் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளதுடன் வீதிகளுக்கு மேலாக வளைவுகளும் கட்டப்பட்டுள்ளன. (அ-2)

# சுற்றுலாப் பயணிக்கு வடை, தேநீர் 800 ரூபாய்க்கு விற்றவர் சிக்கினார்!

கொழும்பு, ஏப். 20

வெளிநாட்டு சுற்றுலாப் பயணியிடம் ஒரு உளுந்து வடை மற்றும் தேனீருக்கு 800 ரூபாய் அறவிட்ட குற்றச்சாட்டில் உணவகமொன்றின் பணியாளரை களுத்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும், குறித்த உணவகத்தின் உரிமையாளர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உறுதிப்படுத்தினார்.

இதேவேளை, அண்மையில் கொழும்பு அளுத்கடை பகுதியில் உணவக உரிமையாளர் ஒருவர் வெளிநாட்டு சுற்றுலாப் பயணியை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# காசல்ரீ நீர்த்தேக்கத்தில் நீராட சென்ற மாணவன் சடலமாகக் கண்டெடுப்பு!

கொழும்பு, ஏப். 20

ஹற்றன், காசல்ரீ நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்று மாயமான 17 வயதுடைய மாணவனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

காசல்ரீ பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரே குறித்த நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்ற நிலையில் நீரில் மூழ்கி காணாமற் போயிருந்தார்.

நேற்று முன் தினம் பிற்பகல் 3.30 மணி அளவிலேயே அவர் காணாமற் போயிருந்தார். இதனையடுத்து காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு பொறுப்பான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து மாணவனை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதனையடுத்து, குறித்த மாணவனின் உடல் நேற்று முன் தினம் பிற்பகல் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அதிகாரிகளின் எச்சரிக்கையை பொருட்படுத்தாமல் மாணவன் நீந்திக் கொண்டிருந்த வேளையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அநுர, சஜித் போன்றவர்களினால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது

## வஜிர அபேவர்த்தன கூறுகிறார்



கொழும்பு, ஏப். 20

அநுர, சஜித் போன்றவர்களால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என்பதால் அவர்கள் அனைவரும் ஜனாதிபதியின் பயணத்தில் இணைந்து கொள்ளவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டைக் கடன் பொறிக்குள் தள்ளிய குற்றச்சாட்டில் இருந்து நாட்டின் ஆட்சிக்கு பங்களிப்புச் செய்த எந்தவொரு அரசியல் கட்சியாலும் விடுவிக்க முடியாது எனவும், அநுர வாங்கிய கடனை தற்போது ரணில் விக்கிரமசிங்க செலுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் ஜே.வி.பியும் நாட்டை ஆட்சி செய்த காலத்தில் பெற்ற கடன்களை தற்போது ரணில் விக்கிரமசிங்க செலுத்தி வருவதாகவும், தனது ஆட்சிக் காலத்தில் பல்வேறு நாடுகளில் இருந்து பெற்ற கடனையும் ரணில் விக்ரமசிங்க செலுத்தி வருவதாகவும் அவர் கூறினார். (அ)

# போதைப்பொருள் வியாபாரிகளுடன் தொடர்பிலிருந்த 2 பொலிஸார் கைது!

கொழும்பு, ஏப். 20

போதைப்பொருள் வியாபாரிகளுடன் தொடர்பில் இருந்த சந்தேகத்தின் பேரில் 2 பொலிஸ் உத்தியோகத்தர்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

மாவத்தகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் தொருட்டியாவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய சார்ஜன்ட் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (அ)

# சுற்றுலாப் பிரதேசங்களில் இனி சிறப்புச் சோதனை நடவடிக்கை!

கொழும்பு, ஏப். 20

நாட்டிலுள்ள சுற்றுலாப் பகுதிகளில் சிறப்பு சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி, கொழும்பு - காலி முகத்திடல், புதுக்கடை, பேருவளை, பெந்தோட்டை, ஹிக்கடுவை, காலி, எல்ல ஆகிய பகுதிகளில் இரவு நேரச் சோதனைகள் நடத்தப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபையின் சோதனைகள் மற்றும் விசேட விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் சங்ஜய இரசிங்க தெரிவித்தார்.

நாட்டில் அண்மைக் காலமாக சுற்றுலாப் பயணிகள் அச்சுறுத்தப்படுதல் மற்றும் ஏமாற்றப்படும் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன.

அண்மையில், கொழும்பு-புதுக்கடை மற்றும் களுத்துறை நகரப் பகுதிகளில் இவ்வாறு இரு சம்பவங்கள் நடைபெற்றிருந்தன.

இதையடுத்தே, இந்த விசேட இரவு நேரச் சோதனைகள் நடத்தப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபையின் சோதனைகள் மற்றும் விசேட விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் சங்ஜய இரசிங்க தெரிவித்தார். (அ)

## எரிபொருட்...

பிரச்னையை தீர்க்க கோரிக்கை விடுத்தோம். எனினும், கலந்துரையாடல் மேற்கொள்வதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 20ஆம் திகதிக்கு பின்னர் எரிபொருள் நிலையங்களில் கடும் நெருக்கடியை சந்திக்கும்.

இந்த வற் வரியால் சிறிய நிரப்பு நிலையங்கள்கூட 10 இலட்சம் ரூபாய்க்கு அதிகமாக வரி செலுத்த நேரிடும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## உயிர்த்த...

காத்திருத்தல், சமூக கலாசார பொருளாதார சட்ட கண்ணோட்டம் என்ற அறிக்கையை நேற்று வெளியிட்டுள்ள சமூகம் மற்றும் மத நிலைய ஆராய்ச்சி அமைப்பு தனது அறிக்கையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து சர்வதேச விசாரணையை கோரியுள்ளது.

அந்த அறிக்கையில், 2019 உயிர்த்த ஞாயிறு தினத்தில் தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐந்து வருடங்களின் பின்னர் இன்னமும் நீதி கிடைக்கவில்லை.

சர்வதேச விசாரணைகளை மேற்கொண்டு தாக்குதலுக்கு காரணமானவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் குறிப்பாக சூத்திரதாரிகளுக்கு எதிராக உச்சபட்ச நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் போதியளவு இழப்பீடு துரிதமாக சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும். உயர்நீதிமன்றம் நஷ்டஈடு வழங்குமாறு உத்தரவிட்டவர்கள் அந்த இழப்பீட்டை உடனடியாக வழங்குவதை உறுதிசெய்ய வேண்டும் - என்றும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (எ)

## இலங்கைக்கு...

கூறினார்.

வாஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியம் / உலக வங்கியின் வசந்த கால கூட்டத்தில் இராஜாங்க நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஆகியோரை சந்தித்தபோதே நிக்கார்டோ புலுடி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தனியார் துறையின் ஈடுபாடு இலங்கையின் வளர்ச்சியை உயர்த்துவதற்கும் நெகிழ்ச்சியான எதிர்காலத்துக்கு வழிவகுப்பதற்கும் முக்கியமானது என நிக்கார்டோ புலிடி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அத்துடன், இரு தரப்பினருக்கும் இடையில் நட்ந்த கலந்துரையாடல் சிறந்த பரிமாற்றம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதி வசதி வழங்கும் வகையில் மூன்று தனியார் வங்கிகள் ஊடாக இலங்கைக்கு 400 மில்லியன் அமெரிக்க டொலர் நாணய பரிமாற்ற வசதியை வழங்க சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டு உறுதியளித்தது.

இலங்கை வளர்ச்சி மற்றும் பின்னடைவுக்கான தனியார் துறை ஈடுபாட்டின் முக்கியத்துவம் பற்றிய தெளிவு படுத்தலுக்கு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதன்போது நன்றி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவின் இணைத் தலைவர் என்ற வகையில் இலங்கைக்கு ஜப்பான் தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என ஜப்பானின் சர்வதேச விவகாரங்களுக்கான பிரதி நிதி அமைச்சர் புஜி டைஜோ தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் சர்வதேச விவகாரங்களுக்கான பிரதி நிதி அமைச்சருக்கும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இதனை கூறியுள்ளார். (ஐ)

## ஜனாதிபதி

ஆளுநராக இருக்கும் விலீ கமகேவுக்கு ஓய்வு வழங்க ஆலோசிக்கப்பட்டுள்ளது. இதற்கு, பஸில் ராஜபக்சவும் இணங்கியுள்ளார் என்று கூறப்படுகின்றது. ஓய்வு பெறும் விலீ கமகே பொதுஜன பெரமுனவின் தேர்தல் நடவடிக்கைக்கு பொறுப்பாக செயல்படவுள்ளார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## அன்னை...

முன்னெடுத்த அன்னை பூபதி ஊர்தி பயணம் நேற்று மாலை நாவலடியிலுள்ள அன்னையின் சமாதிக்கு ஊர்வலமாக சென்று அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

இதேசமயம், மட்டக்களப்பு நினைவேந்தலுக்கு சமாந்தரமாக நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபன் நினைவுத்தூபியில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலும் நேற்றைய தினம் அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. மாணவர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலர் இந்த அஞ்சலி நிகழ்வில் பங்கேற்றனர்.

இதேபோன்று, கிளிநொச்சியில் அன்னை பூபதியின் நினைவேந்தலை ஒட்டி அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது. கிளிநொச்சி சேவை சந்தைப் பகுதியில் நடந்த இந்த உண்ணாவிரதத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர் சி. சிறீதரன் பங்கேற்றார்.

திருகோணமலையில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் மாவட்டப் பணிமனையிலும் அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நினைவேந்தலில் கட்சியை சேர்ந்த பலரும் பங்கேற்றனர்.

அன்னை பூபதி இந்திய அமைதிகாக்கும் படைக்கு எதிராக இரு அம்சக் கோரிக்கையை முன்வைத்து மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றலில் 1988 மார்ச் 19ஆம் திகதி முதல் ஏப்ரல் 19ஆம் திகதி வரை தண்ணீரை மட்டும் அருந்தி உண்ணாவிரதம் இருந்து அன்னை பூபதி உயிர்நீத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மெய்வல்லுநர்...

உயரம் பாய்தல் வீரரான இவர் 1954 (மணிலா), 1958 (ரோக்கியோ), 1962 (ஜகார்த்தா) ஆசிய தடகளப் போட்டிகளில் பங்கேற்றார். 1954 போட்டியில் 1.95 மீற்றர் உயரம் பாய்ந்து உலக சாதனையை படைத்தார். எனினும், அந்தப் போட்டியில் அவரால் 4ஆம் இடத்தையே பெறமுடிந்தது.

1958இல் ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் நடந்த ஆசிய தடகளப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார். ஆசிய போட்டியில் இலங்கைக்கு கிடைத்த முதலாவது தங்கப் பதக்கமாக இது அமைந்தது. 1962ஆம் ஆண்டு ஜகார்த்தாவில் நடந்த ஆசிய தடகள போட்டியில் உயரம் பாய்தலில் வெள்ளிப் பதக்கம் வென்றார். தவிர, 1952, 1956 ஆம் ஆண்டுகளில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கை சார்பாக எதிர் வீரசிங்கம் பங் கேற்றிருந்தார். 1958இல் நடந்த பொது நலவாய விளையாட்டுப் போட்டியிலும் இவர் பங்கேற்றிருந்தார்.

யாழ்ப்பாணம் - பெரியவிளானை பிறப்பிடமாகக் கொண்ட நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார். பாடசாலை காலத்திலேயே உயரம் பாய்தலில் பல சாதனைகளை இவர் படைத்திருந்தார். அத்துடன், கிரிக்கெட் வீரராகவும் அவர் விளங்கினார்.

சியாரா லியோன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியபோது 1973இல் காம்பியா நாட்டுக்கு எதிராக கிரிக்கெட் போட்டியிலும் விளையாடியிருந்தார். அந்தப் போட்டியில் அவர் உப தலைவராக பணியாற்றியிருந்தார்.

தவிர, இலங்கை, சியேரா லியோன், பப்புவா நியூ கினியா, நைஜீரியா ஆகிய நாடுகளில் பல்கலைக்கழக விரிவுரையாளராக பணியாற்றிய இவர், யுனெஸ்கோவிலும் 5 ஆண்டுகள் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கோழி இறைச்சியின் விலை 150 ரூபாய் குறைப்பு

கொழும்பு, ஏப். 20

பண்டிகைக் காலத்தின் பின்னர் ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 150 ரூபாயால் குறைக்கப்பட் டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

எதிர்வரும் நாட்களில் கோழி இறைச்சியின் விலை மேலும் குறைக்கப்படும் என்றும் வியாபாரிகள் கூறினர்.

கொழும்பு நாரஹென் பிட்டி பொருளாதார மத் திய நிலையத்தில் நேற்று ஒரு கிலோ கோழி இறைச் சியின் விலை 100 ரூபாய் குறைத்து விற்பனை செய் யப்பட்டது.

இதன்படி ஒரு கிலோ கறி கோழி இறைச்சி 900 ரூபாயாகவும் ஒரு கிலோ ஆட்டு இறைச்சி 3,300 ரூபாயாகவும் ஒரு கிலோ மாட்டு இறைச்சி 2,400 ரூபாயாகவும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. (எ)

# மதங்களை அவமதிக்கும் குழு உருவாகி வருகின்றது

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஏப். 20

பௌத்தம் உள்ளிட்ட அனைத்து மதங்களையும் பின்பற்றும் நாட்டின் குடிமக்களையும் அவர்களின் மதத்தைப் பின்பற்றும் உரிமையைப் பறிக்கும் ஒரு பிரிவினர் தற்போது நாட்டில் உருவாகி வருகின்றனர். போதி மரம் பயனற்ற மரம் என்று ஒரு குறிப்பிட்ட குழுவினர் நாட்டில் பிரசாரம் செய்து வருகின்றனர் - இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

அவர்களைப் பொறுத்தவரை, விகாரைகளுக்கு உதவிகள் செய்வதும், சிலைகளை வழிபடுவதும் ஏற்கத்தக்கது அல்ல என்கின்றனர். இது தவறா என்று நான் கேள்வி எழுப்புகிறேன். அவர்களின் கருத்துப்படி, இன்றும் நான் ஒரு பெரிய தவறையே செய்து வருகிறேன். இந்நாட்டில் மத சுதந்திரம் இருக்க வேண்டும். நாட்டில் உள்ள 220 இலட்சம் மக்களும் தாங்கள் நம்பும் மதத்தை கடைப்பிடிக்கும் சுதந்திரம் இருக்க வேண்டும்.

இந்த பொய்ப் பிரச்சாரங்களை பரப்பும் நபர்களுக்கு மதத்தில் நம்பிக்கை இல்லை என்று கூறி நாட்டில் மதங்களைப் பின்பற்றும் மக்களுக்கு இடையூறு விளைவிக்க எந்த உரிமையும் இல்லை - என்றார். (ஐ)

# பாரம்பரிய விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 20

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 79ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு சங்கிலியன் மன்ற முற்றத்தில் நிலையத் தலைவர் வி. ஜனகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் ச. லோகசிவம், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி நகுலா தபேந்திரராசா, கிராம உத்தியோகத்தர் நா. ஜெயவிந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (எ)

## சிறுமி...

மக்கள் மற்றும் உறவினர்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சிறுமியின் மரணத்துக்கு அவரின் சிறிய தந் தையே காரணம் என்று கூறி அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி சிறுமியின் வீட்டிலிருந்து ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு சென்று பொலிஸ் நிலையத்தையும் முற்றுகையிட்டதுடன் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். (எ)

## உணவருந்திய...

கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 3 பிள்ளைகளின் தந்தையான கனகரத்தினம் ரவிச்சந்திரன் (வயது 34) என்று அடையாளம் காணப்பட்டது.

இறந்தவரின் சடலம் உடல்கூற்று பரிசோதனைக்காக கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## நயினை...

விடுத்துள்ள இரங்கல் செய்தியில்,

"வேத வித்தகரான முத்துக் குருக்கள் இந்தியா வில் சிவாகம நெறிகளை நன்கு கற்ற பெருமகன்.

தனது தந்தை வழியில் பல ஆலயங்களில் கும்பாபிஷேகத்தை நெறிப்படுத்தினார். ஆலயக் கிரியை நெறிகளில் தெளிந்த அறிவுடைய குருவாக விளங் கியதோடு நற் பண்புகள் நிறைந்த மனிதனாக எல் லோராலும் மதிக்கப்பட்டவர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் வடக்கில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும். (ஐ)

# போதைப்பொருளுடன் கடற்படையினர் கைது

கொழும்பு, ஏப். 20

போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கடற்படையின் லெப்டினன்ட் கொமாண்டர்கள் இருவர் உட்பட நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 510 கிராம் ஐஸ் ரக போதைப்பொருள் கைப்பற்றப் பட்டுள்ள நிலையில் அவற்றின் பெறுமதி 75 இலட்சம் ரூபாய் என பொலிஸார் குறிப்பிட்டனர். (எ)

## பிரிட்டன்...

ஏற்பாடுகள் டியாகோ கார்சியா தீவில் சிக்குண்டுள்ள இலங்கை தமிழ் சிறுவர்களுக்கும் பொருத்தமானது என்று தெரிவித்துள்ளது.

பிரிட்டனின் சிறுவர் சட்டம் டியாகோ கார்சியாவில் சிக்குண்டுள்ள இலங்கை தமிழ் சிறுவர்களுக்குப் பொருந்தாது தனக்கு அதற்கான கடப்பாடு இல்லை என டியாகோ கார்சியா தீவின் ஆணையாளர் போல் காண்டிலரின் சட்டத்தரணிகள் முன்வைத்த வாதத்தை பதில் நீதிபதி மார்க்கிரட் ஒபி நிராகரித்துள்ளார்.

விசேடமான உள்ளூர் சட்டம் இல்லாததால் பிரிட்டனின் சட்டம் செல்லுபடியாகும் - என்றார்.

இலங்கை தமிழ் குடியேற்றவாசிகள் 2021ஆம் திகதி டியாகோ கார்சியா தீவை சென்றடைந்தனர். கனடாவுக்கு செல்வதற்காக அவர்கள் பயணித்துக் கொண்டிருந்த படகு கடலில் தடுமாறியதை தொடர்ந்து அவர்கள் மீட்கப்பட்டனர்.

புகலிடக் கோரிக்கையாளர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றனர் என அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# செம்மணியில் கிரிக்கெட் மைதானம் அமைத்தால் அயற்கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம்!

## ஐங்கரநேசன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 20

**செம்மணியில் துடுப்பாட்ட மைதானம் அமைக்கப்படுமாயின் அயற்கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் காணப்படும் என தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

செம்மணியில் சர்வதேச தரத்திலான துடுப்பாட்ட மைதானமொன்று அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையிலேயே ஐங்கரநேசன் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

செம்மணி உப்பளப்பகுதி குடாநாட்டின் பிரதான கடல் நீரேரிகளில் ஒன்றான உப்பாற்றுக் கடல் நீரேரியை அண்டிய தாழ்வான ஈர நிலம் ஆகும்.

வெளிப்பார்வைக்கு முக்கியத்துவமற்ற வெட்டவெளியாகத் தென்படும் இப் பகுதி சூழலியல்ரீதியாக இன்றிமையாத பங்களிப்புகளை வழங்கி வருகிறது.

மாரியில் சுற்றயல் கிராமங்களில் இருந்து வரும் வெள்ள நீரைத்தேக்கி வைத்து நிலத்தடி நீர் மட்டத்தைப் பேணுவதோடு, நிலம் உவராவதையும் தடுக்கிறது.

கூடவே, மேலதிக நீரைக் குடாநாட்டின் இன்னுமொரு கடல்நீரேரியான யாழ்ப்பாணக் கடல் நீரேரிவழியாகக் கடலுக்குள் அனுப்புவதன் மூலம் குடியிருப்புகளையும் வயல் நிலங்களையும் வெள்ளத்தில் மூழ்காமல் பாதுகாக்கவும் செய்கிறது.

அபிவிருத்தி முதலீட்டாளர்களின் வசதிகளையும் நலன்களையும் மாத்திரமே கருத்திற் கொள்வதாயின் அது நிலைபேறானதாக ஒருபோதும் அமையாது.

அபிவிருத்தியில் சுற்றுச்சூழலினதும், அது சார்ந்த சமூகத்தினதும், நலன்கள் முன்னுரிமை பெறும் போதே அது நீடித்த நிலையான அபிவிருத்தியாக அமையும்.

அந்த வகையில் யாழ் நகரின் நுழைவாசல் என்பதற்காக மாத்திரமே செம்மணியில் துடுப்பாட்ட மைதானத்தை அமைப்பதற்கு முற்படுவது எவ்வகையிலும் ஏற்புடையது அல்ல.

இதனை இதுவரையில் அபிவிருத்திகள் எதனையும் காணாத தீவகத்தின் பகுதிகளில் ஒன்றில் நிறுவுவதே சாலச்சிறந்தது - என்றுள்ளது. (அ)

# இலங்கையருக்கு ஐ.நாவில் உயர் பதவி!



கொழும்பு, ஏப். 20

ஐக்கிய நாடுகளின் மூலதன நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக கலாநிதி பிரதீப் குருகுலசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் பொருளாதார நிபுணர் பிரதீப் குருகுலசூரிய அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.

ஐக்கிய நாடுகளின் மூலதன நிதியத்தில் இணைவதற்கு முன்னர், பிரதீப் குருகுலசூரிய, சுற்றுச்சூழல் நிதிக்கான ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு நிதியத்தின் நிர்வாக ஒருங்கிணைப்பாளராக பணியாற்றியிருந்தார்.

அங்கு அவர் 140 நாடுகளில் இயற்கை, காலநிலை மற்றும் எரிசக்தி நிதியை மேற்பார்வையிட்டார்.

இதேவேளை, அவர் 2006 இல் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்தில் இணைந்ததுடன், அதற்கு முன்னர் உலக வங்கியுடன் இலங்கையில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# 17 ஆமைகளுடன் இருவர் சிக்கினர்



காத்தான்குடி, ஏப். 20

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி தரிசனம் பாடசாலை வீதியிலுள்ள வீடொன்றில் ஆமை இறைச்சி மற்றும் 17 ஆமைகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதேவேளை இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி கஜநாயக்க தெரிவித்தார்.

திருகோணமலையைச் சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (எ)

# 300 மெற்றிக் தொன் பேரீச்சம்பழங்களை பாடசாலைகளுக்கு விநியோகிக்க திட்டம்

கொழும்பு, ஏப். 20

மே 19 ஆம் திகதி பாடசாலை புதிய தவணை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் 3 , 78. 835 மெற்றிக் தொன் பருப்பு 412. 08 மெற்றிக் தொன் சூரியகாந்தி சமையல் எண்ணெய், 300 மெற்றிக் தொன் பேரீச்சம்பழங்கள் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படும் என உலக உணவுத் திட்டத்துக்கான கூட்டுச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.ரிப்லான் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள தரம் 1 - 5 வரையுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் ஒருவேளை உணவு வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

போஷாக்கு நிபுணர்களின் பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் முன்னர், தினமும் காலை 7.30 மணி முதல் 8.30 மணி வரை காலை உணவு வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் ஊடாக "ஆரோக்கியமான சுறுசுறுப்பான மாணவர் தலைமுறை" என்ற கருப்பொருளின் கீழ் 2024 ஆம் ஆண்டிற்கான பாடசாலை உணவுத் திட்டம், பாடசாலை மாணவர்களிடையே போஷாக்குப் பிரச்னைகளைக் குறைத்தல், மாணவர்களின் தினசரி பாடசாலை வருகையை அதிகரித்தல், நல்ல உணவுப் பழக்கம் மற்றும் சுகாதாரப் பழக்கங்களை மேம்படுத்துதல், கல்வி மேம்பாட்டு மட்டத்தை உயர்த்த பங்களித்தல் மற்றும் உள்நாட்டு உணவு கலாசாரத்தை கட்டியெழுப்புதல் ஆகிய அடிப்படை நோக்கங்களை நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகிறது.

9,134 அரச பாடசாலைகளிலும், 100 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட அனைத்துப் பாடசாலைகளிலும் உள்ள அனைத்து ஆரம்ப வகுப்பு மாணவர்களையும் உள்ளடக்கிய இந்த ஆண்டு பாடசாலை உணவுத் திட்டத்தின் மூலம் 1.6 மில்லியன் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

இதற்காக ஒன்பது மாகாண சபைகளுக்கு அரசாங்கம் நேரடியாக 16, 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியுள்ளதுடன் உலக உணவுத் திட்டம் மற்றும் அமெரிக்க விவசாயத் திணைக்களம் உட்பட பல அமைப்புக்களும் அனுசரணை வழங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# விவசாயிகளை வளைத்துப்போட திட்டமிடும் பொதுஜன பெரமுன

கொழும்பு, ஏப். 20

எதிர்வரும் மே தினக் கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் தொழிலாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம் . சந்திரசேன தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

பொதுஜன பெரமுனவின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மே தினக் கூட்டத்துக்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை வரலாற்றில் மே தினக் கூட்டங்களைத் தொடர்ந்து ஏற்பாடு செய்து வரும் பெருமை எமது கட்சியில் உள்ளவர்களுக்கே உரியது.

எதிர்வரும் மே மாதம் இடம்பெறவுள்ள இந்த கூட்டத்தில் இலங்கையிலுள்ள பல்வேறு மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களைச் சேர்ந்த பல தரப்பு மக்களை இணைத்துக்கொள்ள நாம் எதிர்பார்த்திருக்கின்றோம். எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி கெம்பல்பார்க்கில் மாபெரும் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் நாம் எதிர்பார்த்ததற்கும் அதிகளவான மக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த மே தினக் கூட்டமானது ஏனைய வருடங்களை விட மாறுபட்ட முறையில் காணப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.(எ)

# "1,700 ரூபாய் அடிப்படை சம்பளம் நிச்சயம் வழங்கப்பட வேண்டும்"

கொழும்பு, ஏப். 20

உண்மையாக இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி உழைக்கும் தொழிலாளிகளுக்கு 1,700 ரூபாய் அடிப்படைச் சம்பளம் நிச்சயம் வழங்கப்பட வேண்டும். - இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

கடந்த வாரம் நடந்த பேச்சுக்கு முதலாளித்துவ சம்மேளனம் வரவில்லை. அதனை எதிர்த்து போராட்டத்தை முன்னெடுத்தோம் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் பழனிசக்திவேல் தெரிவித்தார்.

முதலாளித்துவ சம்மேளனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பு புறக்கோட்டையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸால் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த பழனிசக்திவேல் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நீண்ட கால அரசியல் வரலாறுடைய அமைப்பு எங்களுடைய அமைப்பு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ். இந்த நாட்டில் காணப்படுகின்ற பெருந்



தோட்டத் துறையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் உள்ளனர். இந்த மக்களுக்கு நாங்கள் கூட்டு ஒப்பந்தம் ஊடாக சம்பளத்தை பெற்றுக்கொடுத்திருந்தோம். இந்த நாட்டில் உண்மையாக இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி உழைக்கும் தொழிலாளிகளுக்கு 1,700 ரூபாய் அடிப்படைச் சம்பளம் வழங்கப்பட வேண்டும். ஆனால் அதை முதலாளி சம்மேளனம் வழங்க மறுக்கிறது.- என்றார். (எ)

# பாலித தேவரப்பெருமவுக்கு ரணில், மகிந்த இறுதி அஞ்சலி

கொழும்பு, ஏப். 20

மறைந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் பாலித தேவரப்பெருமவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறுதி அஞ்சலி செலுத்தினார்.

பாலித தேவரப்பெருமவின் பூதவுடல் வைக்கப்பட்ட அவரது இல்லத்துக்கு நேற்று விஜயம் செய்து அவர் இறுதி அஞ்சலி செலுத்தினார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் மறைந்த பாலித தேவரப்பெருமவின் பூதவுடல் வைக்கப்பட்ட அவரது இல்லத்திற்கு விஜயம் செய்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

அங்கு கருத்து தெரிவித்த மகிந்த ராஜபக்ச ,

பாலித தேவரப்பெரும தேசத்தின் குடிமக்களுக்காகவும் அவர்களுக்காகவும் நின்று உழைத்த ஒரு அரசியல்வாதி - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இறுதிவரை போராடிய பஞ்சாப் பும்ராவால் தப்பித்தது மும்பை!

முலான்பூர், ஏப். 20

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 33 ஆவது லீக் போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணியை 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது மும்பை இந்தியன்ஸ் அணி. பஞ்சாப் அணிக்காக ஷஷாங் சிங் மற்றும் அ/தோஷ் சர்மா ஆகியோர் அதிரடியாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தனர். இறுதி ஓவர் வரை இந்த இருவரும் வெற்றிக்காக போராடியிருந்தனர்.

முலான்பூரில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி பந்து வீச்சைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி, 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 192 ஓட்டங்கள் எடுத்தது. சூர்யகுமார் யாதவ் 78 ஓட்டங்களைக் குவித்தார். ரோஹித் சர்மா 36 மற்றும் திலக் வர்மா 34 ஓட்டங்கள் எடுத்தனர். பஞ்சாப் சார்பில் ஹர்ஷல் படேல் அதிகபட்சமாக 3 விக்கெட்களை கைப்பற்றினார்.

193 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை பஞ்சாப் அணி விரட்டியது. அணித் தலைவர் சாம் கரன் மற்றும் பிரப்சிம்ரன் சிங் இணைந்து இன்னிங்ஸை ஆரம்பம் செய்தனர். 2.1 ஓவருக்குள் 4 விக்கெட்களை இழந்து தடுமாறியது பஞ்சாப். பிரப்சிம்ரன் சிங், ரூசோவ், சாம் கரன் மற்றும் லிவிங்ஸ்டன் ஆகியோர் அடுத்தடுத்து விக்கெட்டை பறிகொடுத்து அதிர்ச்சி கொடுத்தனர்.

தொடர்ந்து பாட்டியா மற்றும் ஜிதேஷ் சர்மா ஆகியோரும் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். பஞ்பாப் அணிக்கு ஓரளவு நம்பிக்கை கொடுத்த ஷஷாங் சிங் 25 பந்துகளில் 41 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதன் பின்னர் 8 ஆவது விக்கெட்டுக்கு 57 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர் அ/தோஷ்



சர்மாவும், ஹர்ப்ரீத் பிராரும்.

இந்நிலையில், 28 பந்துகளில் 61 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அ/தோஷ் ஆட்டமிழந்தார். 21 ஓட்டங்கள் எடுத்த ஹர்ப்ரீத் பிராரும் ஆட்டமிழந்தார். ரபாடா கடைசி ஓவரின் முதல் பந்தில் ஓட்டம் எடுக்க முற்பட்டு ஆட்டமிழந்தார். மும்பை இந்தியன்ஸ் சார்பில் 4 ஓவர்கள் வீசி 21 ஓட்டங்கள் கொடுத்து 3 விக்கெட்களை வீழ்த்தினார் பும்ரா. கோட்ஸியும் 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

19.1 ஓவர்களில் 183 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்களையும் இழந்தது பஞ்சாப். இதன் மூலம் 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி வெற்றி பெற்றது. ஆட்டநாயகன் விருதை பும்ரா பெற்றார். தொடர் தோல்விகளிலிருந்து மும்பை மீண்டுள்ள அதேவேளை, பஞ்சாப் அணி தொடர் தோல்விகளைச் சந்தித்து வருகிறது குறிப்பிடத்தக்கது. (எ)



## ஐ. பி. எல். தொடரிலிருந்து டெவன் கொன்வே விலகல்

சென்னை, ஏப். 20

நடப்பு ஐ. பி. எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வீரர் டெவன் கொன்வே காயம் காரணமாக அணியிலிருந்து விலகினார். அவருக்குப் பதிலாக இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ரிச்சர்ட் க்ளீசனை சி. எஸ். கே. அணி இணைத்துள்ளது.

2022, 2023 ஆகிய இரண்டு ஐ. பி. எல். சீசன்களில் சென்னை அணிக்காக விளையாடியவர் டெவன் கொன்வே. நியூஸிலாந்து அணியைச் சேர்ந்த கொன்வே 23 போட்டிகளில் விளையாடி 924 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார். இதில் 9 அரைச் சதங்களை விளாசியுள்ளார். இதேவேளை ஐ. பி. எல்லில் 92 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுள்ளார்.

இந்நிலையில், டெவன் கொன்வே காயம் காரணமாக நடப்பு ஐ. பி. எல். தொடரிலிருந்து விலகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அவருக்குப் பதிலாக இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ரிச்சர்ட் க்ளீசன் சேர்க்கப்பட்டுள்ளார். ரிச்சர்ட் க்ளீசன் இதுவரை 90 ரி - 20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி 101 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். (எ)

## இக்கட்டான நேரத்தில் மும்பையை வழிநடத்தினார் ரோஹித் சர்மா

முலான்பூர், ஏப். 20

ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் மும்பை இந்தியன்ஸ் - பஞ்சாப் கிங்ஸ் ஆகிய அணிகள் மோதின. இதில் முதிலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி சூர்யகுமார் யாதவ் மற்றும் ரோஹித் சர்மாவின் அதிரடியால் 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 192 ஓட்டங்கள் எடுத்தது.

இதனையடுத்து களமிறங்கிய பஞ்சாப் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது. அந்த அணி 14 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 4 விக்கெட்டுகளை இழந்தது. அதனைத் தொடர்ந்து 77 ஓட்டங்களில் 6 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

அந்த நேரத்தில் ஷஷாங்க் சிங்- அசுதோஷ் சர்மா இணை பொறுப்புடன் விளையாடி ஓட்டங்களைக் குவித்தனர். இந்த ஜோடி 7 ஆவது விக்கெட்டுக்கு 34 ஓட்டங்கள் சேர்த்தது. ஷஷாங்க் சிங் 25 பந்தில் 41 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து ஜோடி சேர்ந்த அசுதோஷ் சர்மா-ப்ரார் ஜோடி மும்பை அணிக்கு பயத்தை காட்டியது. அதிரடியாக விளையாடிய அசுதோஷ் சர்மா அரைச் சதம் அடித்து அசத்தினார். ஒரு கட்டத்தில் பஞ்சாப் அணி 15 ஓவரில் 141 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

அந்த நிலையில் 16 ஆவது ஓவரை மும்பை அணியின் மத்வால் வீசினார். அந்த ஓவரில் அதிரடி காட்டிய இந்த ஜோடி 3 சிக்ஸர்கள் உட்பட 24 ஓட்டங்கள் குவித்தது. இதனால் 16 ஆவது ஓவர்



முடிவில் பஞ்சாப் அணி 165 ஓட்டங்கள் சேர்த்தது. இதனால் 24 பந்துகளில் பஞ்சாப் அணிக்கு 28 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்பட்டது.

இந்த நிலையில் ஹர்திக் பாண்டியா மிகவும் பதற்றமாக காணப்பட்டார். அப்போது நேர தாமதம் கேட்கப்பட்டது. நேர தாமதம் முடிந்த நிலையில் ரோஹித் சர்மா களத்தடுப்பு மற்றும் பந்து வீச்சாளர்களிடம் ஆலோசனை நடத்துவது என அணித் தலைவராக மாறிவிட்டார். இதனை வைத்து நெட்டிசன்கள் கலாய்த்து வருகின்றனர்.

மேலும் சிங்கம் படத்தில் சூர்யா மீண்டும் பொலிஸ் பணிக்குத் திரும்புவது போல ரோஹித் சர்மா தலைமைப் பொறுப்பை எடுத்து அணியை வெற்றி பெற வைத்தார் எனவும் நெட்டிசன்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.(எ)

## குஜராத்தி, பிரக்ஞானந்தா தோல்வி

டொராண்டோ, ஏப். 20

பிடே கேண்டிடேட்ஸ் செஸ் தொடர் கனடாவிலுள்ள டொராண்டோ நகரில் நடைபெற்று வருகிறது. இதன் 11 ஆவது சுற்றில் இந்திய கிராண்ட் மாஸ்டரான டி.குகேஷ், அமெரிக்க கிராண்ட் மாஸ்டரான ஃபேபியானோ கருணாவுடன் மோதினார்.

இந்த ஆட்டம் 40 ஆவது காய் நகர்த்தலின்போது சமநிலையில் முடிவடைந்தது. மற்றொரு இந்திய கிராண்ட் மாஸ்டரான விதித் குஜராத்தி, ரஷ்யாவின் இயன் நெபோம்னியாச்சியுடன் மோதினார். இந்த ஆட்டத்தில் விதித் குஜராத்தி 67 ஆவது காய் நகர்த்தலின்போது அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

இந்தியாவின் ஆர்.பிரக்ஞானந்தா 54 ஆவது காய் நகர்த்தலின் போது அமெரிக்க கிராண்ட் மாஸ்டரான ஹிகாரு நகமுராவிடம் தோல்வியடைந்தார். மற்றொரு ஆட்டத்தில் பிரான்ஸ் கிராண்ட் மாஸ்டரான அலிரேசா ஃபிரோஸ்ஜா 24-வது காய் நகர்த்தலின் போது அஜர்பைஜான் கிராண்ட் மாஸ்டரான நிஜாத் அபாசோவை தோற்கடித்தார். 11 சுற்றுகளின் முடிவில் இயன் நெபோம்னியாச்சி 7 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். (எ)





## டேபிள் டென்னிஸ் தொடர் மணிகா, சிறீ ஜா தோல்வி!

டில்லி, ஏப். 20

சீனாவிலுள்ள மக்காவ் நகரில் ஐ. டி. டி. எப் உலகக் கிண்ண டேபிள் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நடந்த



ஆட்டத்தில் இந்திய நட்சத்திர வீராங்கனையான மணிகா பத்ரா, உலகத் தரவரிசை யில் இரண்டாவது இடத்திலுள்ள சீனாவின் மான்யூவுடன் மோதி னார். இதில் மணிகா பத்ரா 6-11, 4-11, 9-11, 4-11 என்ற கணக்கில் தோல்வியடைந்தார்.

மற்றொரு இந்திய வீராங்கனை யான சிறீ ஜா அகுலா, உலகத் தரவரிசையில் 4 ஆவது இடத்தி லுள்ள நடப்பு சம்பியனான சீனா வின் ஷென் மெங்குடன் மோதி னார்.

இதில் உலகத் தரவரிசையில் 39 ஆவது இடத்திலுள்ள சிறீ ஜா அகுலா 4-11, 4-11, 15-13, 2-11 என்ற கணக்கில் தோல்வியடைந் தார். மணிகா பத்ரா, சிறீ ஜா அகுலா ஆகிய இருவருமே தங்க ளது முதல் ஆட்டத்தில் வெற்றி பெற்ற நிலையில் 2 ஆவது ஆட்டத்தில் தோல்வியைச் சந்தித்தனர். (எ)

# காஸா போர்: தப்பிக்க முயன்ற மக்களை தவறாக வழிநடத்தியதா இஸ்ரேல்?

ஸ்டெஃபனி ஹெகார்டி
அகமது நூர்

தாக்குதல்களுக்கு முன்னதாக காஸாவில் உள்ள மக்களுக்கு இஸ்ரேல் விடுத்த வெளியேற்ற எச்சரிக்கைகளில் குறிப்பிடத்தக்க பிழைகள் இருப்பதை பிபிசி பகுப்பாய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

விடுக்கப்பட்ட எச்சரிக்கைகள் முரண்பாடான தகவல்களைக் கொண்டிருந்தன. குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் இருந்த அந்த எச்சரிக்கைகளில் சில மாவட்டங்களின் பெயர்களும் அதில் தவறாகக் குறிப்பிடப்பட்டிருந்தன.

இத்தகைய தவறுகளால், சர்வதேச சட்டத்தின் கீழ் இஸ்ரேல் தனது கடமைகளை மீறுவதாகக் கருதப்படும் என நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால் இந்த எச்சரிக்கைகள் குழப்பமானதாகவோ அல்லது முரண்பாடாகவோ இருப்பதாகக் கூறப்படுவதை இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் நிராகரித்துள்ளன.

பிபிசியால் பகுப்பாய்வு செய்யப்பட்ட எச்சரிக்கைகள் என்பது பொதுமக்களை ஆபத்தான பகுதிகளில் இருந்து வெளியேற்றுவதை ஊக்குவிக்க எடுக்கப்பட்ட முயற்சிகளின் ஒரு கூறு மட்டுமே எனத் தனது அறிக்கையில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படை கூறியுள்ளது.

சூழ்நிலைகள் மோசமாக இருந்தால் ஒழிய, பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய தாக்குதல்களைப் பற்றிய முன்னெச்சரிக்கையை கண்டிப்பாக வெளியிட வேண்டுமென சர்வதேச மனிதாபிமானச் சட்டம் கூறுகிறது.

ஹமாஸுக்கு எதிரான தனது போரைத் தொடர்வதால், பொதுமக்கள் ஆபத்தில் இருந்து தப்பிக்க உதவும் வகையில் தனது எச்சரிக்கை அமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் கூறுகிறது. இந்த அமைப்பு காஸாவின் வரைபடத்தை நூற்றுக்கணக்கான எண்ணிடப்பட்ட தொகுதிகளாகப் பிரிக்கிறது. ஆனால் இந்த எண்ணற்ற தொகுதி அமைப்பானது காஸா மக்களுக்குப் பழக்கப்பட்டதல்ல.

மக்கள் வெளியேறுவதற்கான எச்சரிக்கை விடுக்கப்படும்போது, தாங்கள் பாதிக்கப்படக்கூடிய பகுதியில் இருக்கிறோமா இல்லையா என்பதை காஸா மக்கள் கண்டறிய, அந்தப் பிரிக்கப்பட்ட தொகுதிகளின் ஆன்லைன் வரைபடத்தை (மாஸ்டர் பிளாக்) இஸ்ரேல் தயாரித்துள்ளது.

ஜனவரியின் பிற்பகுதியில் இஸ்ரேல் பாதுகாப்புப் படைகளின் சார்பாக எக்ஸ் தளத்தில் (முன்னர் ட்விட்டர்) வெளியிடப்பட்ட ஒரு பதிவில், க்யூஆர் குறியீடு வழியாக மாஸ்டர் பிளாக் வரைபடத்தை அணுகுவதற்கான இணைப்பு வழங்கப்பட்டது.

ஆனால் எங்களிடம் பேசிய காஸா மக்கள் சிலர், இணையத்தைப் பயன்படுத்துவதில் உள்ள சிக்கல்களையும், எச்சரிக்கைகளில் உள்ள பிழைகளைப் புரிந்துகொள்வதற்கும், வரைபடத்தைப் பார்த்து புதிய வழிகளைக் கண்டறியவும் கடினமாக இருப்பதை விவரித்துள்ளனர்.

ஃபேஸ்புக், எக்ஸ் (முன்னர் ட்விட்டர்) மற்றும் டெலிகிராமில் உள்ள ஐடிஎஃப்-இன் அரபி மொழி சமூக ஊடக சேனல்களை பிபிசி பகுப்பாய்வு செய்தது. அங்கு எச்சரிக்கைகள் அடங்கிய நூற்றுக்கணக்கான பதிவுகளை நாங்கள் கண்டோம்.


ஒரே எச்சரிக்கை மீண்டும் மீண்டும், சில நேரங்களில் சிறிய மாற்றங்களுடன், தொடர்ச்சியான நாட்களில் அல்லது வெவ்வேறு நாட்களில் வெவ்வேறு சேனல்களில் வெளியிடப்பட்டுள்ளது.

துண்டுப் பிரசுரங்களாக வெளியிடப்பட்டு, பின்னர் புகைப்படம் எடுக்கப்பட்டு ஆன்லைனில் பகிரப்பட்ட எச்சரிக்கைகளையும் நாங்கள் தேடினோம். காஸா மீது 16 மில்லியன் துண்டுப் பிரசுரங்களை வீசியுள்ளதாக ஐடிஎஃப் கூறுகிறது.

டிசம்பர் 1 முதல் வெளியிடப்பட்ட எச்சரிக்கைகளில் பிபிசி கவனம் செலுத்தியது. ஏனெனில் சர்வதேச அழுத்தத்தின் கீழ் வந்த பிறகு, முன்பைவிட மிகவும் துல்லியமான வழிமுறைகளை வழங்கும் ஒரு வழியாக தனது பிளாக் அமைப்பை டிசம்பர் 1 முதல் ஐடிஎஃப் தொடங்கியது.



22 டிசம்பர் முதல் ஐடிஃஎப் பகிர்ந்துள்ள சமூக ஊடக பதிவுகள்




ஆதாரம் : இஸ்ரேல் பாதுகாப்பு படைகள் BBC

இந்தத் தேதிக்குப் பிறகு நாங்கள் கண்டறிந்த ஐடிஎஃப் அமைப்பின் பதிவுகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் அனைத்தையும் 26 தனித்தனி எச்சரிக்கைகளாகப் பிரித்தோம். பெரும்பான்மையானவர்கள் மாஸ்டர் பிளாக் அமைப்பைப் பற்றிக் குறிப்பிட்டனர்.

ஆன்லைன் எச்சரிக்கைகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள், முன்பே பதிவு செய்யப்பட்ட தொலைபேசி செய்திகள் மற்றும் தனிப்பட்ட தொலைபேசி அழைப்புகள் மூலம் வரவிருக்கும் தாக்குதல்கள் குறித்து எச்சரித்ததாக ஐடிஎஃப் அமைப்பு பிபிசியிடம் தெரிவித்தது.

காஸாவில் சாலை மார்க்கமாகச் சென்று விரிவான அறிக்கைகளைப் பெறுவது சாத்தியமில்லை. தொலைபேசி நெட்வொர்க் கடுமையாகச் சேதமடைந்துள்ளதால், செய்திகள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் பற்றிய ஆதாரங்களை பிபிசியால் சேகரிக்க முடியவில்லை.

பிபிசி கண்டறிந்த 26 தனித்தனி எச்சரிக்கைகளில் இஸ்ரேல் பாதுகாப்புப் படையின் குறிப்பிட்ட தகவல்கள் உள்ளன. அவற்றை ஆபத்தான பகுதிகளில் இருந்து வெளியேற காஸா மக்கள் பயன்படுத்தலாம். ஆனால் அவற்றில் 17 பிழைகளும் இருந்தன. அவை, சமூக ஊடகப் பதிவில் இருந்த 12 எச்சரிக்கைகள், அதில் தொகுதி



கள் அல்லது சுற்றுப்புறங்கள் குறித்து பட்டியலிடப்பட்டிருந்தது, ஆனால் அதனுடன் உள்ள வரைபடத்தில் அந்தப் பகுதிகள் குறிப்பிடப்படவில்லை.

ஒன்பது பகுதிகள் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனால் அதனுடன் இருந்த சமூக ஊடகப் பதிவில் பட்டியலிடப்படவில்லை.

பத்து எச்சரிக்கைகள், தொகுதிகள் இரண்டாகப் பிரித்து காட்டப்பட்டிருந்தன. ஆனால் பிரிக்கப்பட்ட தொகுதிகளின் எல்லையை நிர்ணயிக்கும் அளவுக்கு அந்த வரைபடம் விரிவாக இல்லை.

ஏழு எச்சரிக்கைகளின் வரைபடத்தில் 'பாதுகாப்பு' பகுதிகளை சுட்டிக்காட்டுவதற்குப் பதிலாக, மக்கள் வெளியேற வேண்டிய பகுதிகளையும் சேர்த்தே சுட்டிக்காட்டுகின்றன.

மேலும், ஒரு எச்சரிக்கையில் ஒரு மாவட்டத்தில் இருக்கும் பகுதிகள் மற்றொரு மாவட்டத்தில் இருப்பதாகப் பட்டியலிடப்பட்டுள்ளது. மற்றொன்று இரண்டு பகுதிகளின் தொகுதி எண்களை இணைத்துக் கொடுத்துள்ளது. மூன்றாவதாக, பதிவில் பட்டியலிடப்பட்டுள்ள சில தொகுதிகள் காஸாவின் எதிர்பக்கத்தில் உள்ளது போல வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்தப் பிழைகள் பற்றி நாங்கள் இஸ்ரேல் பாதுகாப்புப் படையிடம் கேட்டபோது, அவர்கள் வரைபடத்தில் உள்ள சிக்கல்கள் குறித்து பதிலளிக்கவில்லை. ஆனால் சமூக ஊடக பதிவுகளின் செய்தி போதுமான அளவு தெளிவாக உள்ளது எனக் கூறினர்.

மக்களைப் பாதுகாப்பான பகுதிக்கு அழைத்துச் செல்ல வரைபடத்தில் அம்புகள் பயன்படுத்தப்படும் போது, 'அம்புகள் பொதுவான திசையைச் சுட்டிக்காட்டுகின்றன என்பது வெளிப்படையான ஒரு விஷயம்தான்' எனவும் பதிவுகளின் செய்தியில் முக்கிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும் இஸ்ரேல் பாதுகாப்புப் படை மீண்டும் வலியுறுத்தியது.

இந்தத் தவறுகள் மற்றும் பிழைகள் சர்வதேச சட்டத்தின் கீழ் 'பயனுள்ள மேம்பட்ட எச்சரிக்கைகளை' வழங்குவதற்கான இஸ்ரேலின் கடமையை மீறக்கூடும் என்று ஆக்ஸ்ஃபோர்ட் இன்ஸ்டிடியூட் ஆஃப் எதிக்ஸ், சட்டம் மற்றும் ஆயுத மோதல் பிரிவின் இணை இயக்குநர் ஜானினா டில் கூறுகிறார்.

13 டிசம்பர் முதல் ஐடிஃஎப் பகிர்ந்துள்ள சமூக ஊடக பதிவுகள்




ஆதாரம் : இஸ்ரேல் பாதுகாப்பு படைகள் BBC

"பெரும்பாலான எச்சரிக்கைகளில் பிழைகள் இருந்தாலோ அல்லது பொதுமக்களால் புரிந்துகொள்ள முடியாத அளவிற்குத் தெளிவில்லாமல் இருந்தாலோ, சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழ் அவர்கள் கொண்டிருக்கும் செயல்பாட்டை இந்த எச்சரிக்கைகள் உறுதி செய்யவில்லை என அர்த்தம்" என்று கூறுகிறார் அவர்.

"இந்த எச்சரிக்கைகளின் நோக்கம் பொதுமக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வாய்ப்பை வழங்குவதாகும். அதன் பிழைகள் அவர்களின் செயல்பாட்டை சந்தேகத்திற்கு உட்படுத்துகிறது," என எக்ஸிடெர் பல்கலைக்கழகத்தின் சர்வதேச சட்டப் பேராசிரியரான குபோ மக்காக் கூறுகிறார்.

**"பெரிய விவாதம்"**

காஸா நகரத்தைச் சேர்ந்த தொழிலதிபர் சலே, டிசம்பரில் மத்திய காஸாவில் உள்ள நுசிராட்டில் தனது குழந்தைகள் மற்றும் உறவினர்களுடன் தங்கியிருந்த போது அங்கு மின்சாரம், தொலைபேசி சிக்னல்கள் இல்லை என்றும், நீண்ட நேரம் இணையத் தடை இருந்தது என்றும் கூறுகிறார்.

ஷெல் குண்டுகள் வீசப்பட்டதால், அருகிலுள்ள பள்ளியிலிருந்த மக்கள் கொல்லப்படுவதையும் மற்றவர்கள் தப்பி ஓடுவதையும் அவர் பார்த்துள்ளார். தனக்கு ஐடிஎஃப் அமைப்பின் வெளியேற்ற விவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை என்று அவர் கூறுகிறார்.

இறுதியில், எகிப்து மற்றும் இஸ்ரேலில் உள்ள தரவு நெட்வொர்க்குகளை அணுகக்கூடிய சிம் கார்டு பயன்படுத்தும் ஒருவரைக் கண்டுபிடித்தார். அதன் மூலம் இஸ்ரேலிய அரசாங்கத்தின் முகநூல் பக்கத்தில் வெளியேறுவதற்கான எச்சரிக்கை குறித்த பதிவைக் கண்டார்.

"பல குடியிருப்புத் தொகுதிகளுக்கு வெளியேற்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் நாங்கள் எந்தத் தொகுதியில் வசித்தோம் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. இதுவொரு பெரிய குழப்பத்திற்கு வழிவகுத்தது," என்று சலே கூறுகிறார்.

சலேவால் எப்போதாவதுதான் இணையத்தைப் பயன்படுத்த முடிந்தது. போருக்கு சற்று முன்பு பிரிட்டனில் வசிக்கும் அவரது மனைவி அமானிக்கு ஒரு செய்தி அனுப்பினார். அவரது மனைவியால், ஆன்லைனில்

(16ம் பக்கத் தொடர்ச்சி)

# வெப்ப அலை: கர்ப்பவதிகள், குழந்தைகள், நீரிழிவு நோயாளிகள் என்ன செய்ய வேண்டும்?

தமிழகம் முழுவதும் கோடை காலம் துவங்கி கடும் வெப்ப அலை வீசுவதால் மக்கள் கடுமையாக பாதித்துள்ளனர். வெப்ப அலையில் இருந்து காத்துக்கொள்ள, வயது அடிப்படையில் மக்களை ஐந்து வகையாக பிரித்து மருத்துவர்கள் அறிவுரை வழங்கியுள்ளனர்.

இந்தியா முழுவதும் பல மாநிலங்களில் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. வெப்ப அலை அதிகரிக்கும் போது பாதுகாப்பாக இருக்குமாறு இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. தனது அறிக்கையில், ஏப்ரல், மே மற்றும் ஜூன் வரையிலான கோடை காலத்தில், இந்தாண்டு வழக்கத்திற்கு மாறாக அதிக வெப்ப அலை வீசும் எனவும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

தமிழ்நாட்டை பொறுத்தவரையில் கடந்த ஏப்ரல் ஒன்றாம் தேதி முதல், வேலூர், சென்னை, கடலூர், சேலம், தருமபுரி, கோவை என பரவலாக பல மாவட்டங்களில் கடும் வெயில் நிலவுவதை பார்க்க முடிகிறது.

வழக்கமாக மே மாதம் கத்தரி வெயில் அல்லது அக்னி நட்சத்திர காலத்தில் தான் அதிக வெப்பம் இருக்கும். ஆனால், வழக்கத்திற்கு மாறாக இந்தாண்டு கத்தரி வெயில் துவங்கும் முன்பே வெயில் சுட்டெரிக்கிறது.

வெப்ப அலையும் வீசுவதால் மக்கள் கடுமையாக பாதித்துள்ளனர். வெயிலின் தாக்கத்தை முறையாக கண்டுகொள்ளாமல் விட்டால் மரணம் நேரிடும் வாய்ப்பு கூட உள்ளதென எச்சரிக்கின்றனர் மருத்துவர்கள். வெப்ப அலை வீசும் கோடையில் நாம் என்னென்ன செய்யக்கூடாது என, வயதுக்கேற்ப பிரித்து அறிவுரையை கூறுகின்றனர் மருத்துவர்கள்.

### குழந்தைகளை எப்படி பராமரிக்க வேண்டும்?

கோவை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையின் உதவி சித்த மருத்துவ அலுவலர் வித்யாதேவி, “ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு வியர்வையால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க, பருத்தி துணிகள் மட்டுமே அணிவிக்க வேண்டும்.

ஒரு நாளைக்கு இருமுறை லேசான சூட்டிலுள்ள நீரில் குளிக்க வைப்பதுடன், தாய்ப்பால் மட்டுமே கொடுக்க வேண்டும். தேங்காய் எண்ணெய் கொண்டு கை கால்களுக்கு மசாஜ் செய்யும் போது, வியர்வை சுரப்பிகள் அடைத்துக்கொள்ளும். எண்ணெய் கொண்டு மசாஜ் செய்தவுடன் சில நிமிடங்கள் கழித்து சூடான நீரில் கழுவிவிட வேண்டும்,” என்கிறார்.



### குழந்தைகள் பாதுகாப்பு

3 - 12 வயதுள்ள குழந்தைகளை, குறிப்பாக காலை 11:00 - மாலை 4:00 மணி வரையில் வெளியில் விளையாட அனுமதிப்பதை கட்டாயம் தவிர்க்க வேண்டும்.

ஐஸ்கிரீம், கூல்டிரிங்ஸ்களை கொடுப்பதற்கு பதிலாக, தயிர் சேர்த்த கம்மங்கூழ், பழச்சாறு, இளநீர், நுங்கு கொடுக்க வேண்டும். வியர்வையால் நம் உடலில் இருந்து தாது உப்புகள் வெளியேறி பற்றாக்குறை ஏற்படும்.

இதை தடுக்க எலுமிச்சை ஜூஸ் தயாரித்து அதில் சர்க்கரை மட்டுமின்றி உப்பு சேர்த்து கொடுக்க வேண்டும். வேர்க்குரு அல்லது அம்மை போன்ற பாதிப்புகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்.

“வெயில் என்று கூறி விளையாட அனுமதிக்காமல் விட்டால் செல்போனுக்கு அடிமையாகிவிடுவார்கள், கவனமாக பார்த்துக்கொள்ள வேண்டும். இரவு, 6 - 9 மணி வரையில் வேண்டுமானாலும் விளையாட அனுமதிக்கலாம்”, என்கிறார் கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் முதல்வர் நிர்மலா.

### கர்ப்பிணிகளுக்கு பாதிப்பு அதிகம்

வெப்ப அலையால் கர்ப்பிணிகளுக்கு அதிக பாதிப்பு ஏற்படும் என்பதால், கூடுதல் கவனத்துடன் அவர்களை கவனித்துக் கொள்ள வேண்டும் என மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

“‘கர்ப்ப காலத்தில் சாதாரணமாகவே நீர் குடித்தால் வாந்தி வரும் என்பதால், பல பெண்கள் நீர் குடிப்பதை தவிர்ப்பார்கள். இதனால், பிரசவிப்பதே பெரும் சிக்கலுக்கு உள்ளாகி, குழந்தையின் உயிருக்கே ஆபத்து ஏற்படும். பனிக்குடத்தில் குழந்தைக்கு தேவையான நீர் இருக்க வேண்டுமென்பதால், கர்ப்பிணிகள் சிரமப்பட்டாவது அடிக்கடி போதிய நீர் குடிக்க வேண்டும்,” என்கிறார் மருத்துவர் வித்யாதேவி.

கர்ப்பிணிகள், மற்றவர்களைப் போலவே இளநீர், பழச்சாறு போன்றவற்றை குடிக்கலாம்.

அதிக நீர் குடித்து சிறுநீர் கழிக்க வேண்டும் போதிய அளவு சிறுநீர் போகாமல் விட்டாலும் அலர்ஜி போன்ற பாதிப்புகள் ஏற்படும்.

**தமிழகத்தின் சென்னையில் மழை பெய்தால் யாழ்ப்பாணத்திலும் பெய்யும். அங்கு கடும்வெய்யில் என்றால் இங்கும் வெய்யில் தாக்கும். அதனால் அங்குள்ள வெப்ப நிலையை சமாளிக்க என்னசெய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ள அறிவுரைகள் எமக்கும் பயன்தரும் என்பதால் இங்கு பிரசுரமாகின்றது**



“வெயிலால் திடீர் மயக்கம் ஏற்படும் என்பதால், வெளியில் சென்றால் தனியாக செல்லக்கூடாது. வெயிலால் வாந்தி, குமட்டல், மயக்கம் மற்றும் வயிற்று வலி ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்”, என்று கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் முதல்வர் நிர்மலா கூறினார்.

### ‘முதியவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்’


கோவை மருத்துவக் கல்லூரி முதல்வர் நிர்மலா, “தேர்தல் வருவதால் முதியவர்கள் முடிந்த வரையில், பகல் நேரங்களில் தேர்தல் பணிகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். முதியவர்களின் தோல் மிகவும் வறண்டு இருப்பதால், வெப்ப அலையினால் சரும பாதிப்புகள் ஏற்படும். இதை தடுக்க வெயிலில் சுற்றுவதை தவிர்க்க வேண்டும். அதேபோல், பருத்தி மூலம் தயாரிக்கப்பட்ட வெளிர் நிற துணிகளை உடுத்த வேண்டும்,” என்கிறார்.

முதியவர்களுக்கான அறிவுரைகளை முன்வைக்கும் சித்த மருத்துவர் வித்யாதேவி, “சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரையில் கோடை காலத்தில் மலச்சிக்கல் ஏற்படுவது வழக்கம். இதை தவிர்க்க நார்ச்சத்து அதிகம் உள்ள உணகளை எடுத்துக்கொள்ள வேண்டும். உடலில் பொட்டாசியம் குறையும் என்பதால் தினமும் ஒரு வாழைப்பழும் சாப்பிட வேண்டும்.,” என்கிறார் வித்யாதேவி.

## இந்தியாவில் அதிக வெப்பநிலையில் பணிபுரிவது கர்ப்பகால அபாயங்களை இரட்டிப்பாக்கலாம்


ஆய்வில் பங்கேற்ற அதிக வெப்பநிலையில் வாழும் பெண்களுக்கு ஏற்பட்ட பாதகமான விளைவுகளின் விகிதம்:

■ வெப்பத்திற்கு ஆளானவர்கள் ■ வெப்பம் படாதவர்கள்




ஆதாரம் : Heat stress and adverse pregnancy outcome: Prospective cohort study. BJOG, 2023

BBC



### நீரிழிவு நோய் உள்ளவர்கள் என்ன செய்ய வேண்டும்?

நீரிழிவு நோய் மற்றும் ரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு சில அறிவுரைகளை முன்வைக்கிறார் வித்யாதேவி.

நீரிழிவு நோய் உள்ளவர்கள் தினமும் பழம் சாப்பிட்டு உடலில் சர்க்கரை அளவை உயர்த்திக்கொள்ள கூடாது. இதற்கு மாற்றாக அதிகம் நீர் மோர் மற்றும் இளநீர் (தேங்காய் மிகக்குறைவாக நீர் அதிகமுள்ள இளநீர்) பருக வேண்டும். நீரிழிவு மற்றும் ரத்த அழுத்தம் உள்ளவர்கள், கோடை காலத்தில் மது அருந்துவதை கட்டாயம் தவிர்க்க வேண்டும். உரிய நேரத்தில் சாப்பிட்டு மருந்துகள் எடுத்துக்கொள்ள வேண்டும்,” என்கிறார் மருத்துவர் வித்யாதேவி.

வெளியில் செல்லும் போது அனைவரும் கட்டாயம் கையில் குடையும் குடிநீர் பாட்டிலும் எடுத்துச்செல்வதுடன், வாகனங்களை வெயிலில் நிறுத்திவிட்டு அதில் உடனடியாக பயணிக்கக் கூடாது. மதியம் 12:00 - 4:00 மணி வெயிலை தவிர்ப்பது சிறந்தது என, சில பொதுவான அறிவுரைகளையும் தெரிவிக்கிறார் கோவை மருத்துவக்கல்லூரி முதல்வர் நிர்மலா.

### ‘கவனக்குறைவு கூடாது உயிருக்கே ஆபத்தாகும்’

கோடையின் வெப்ப அலை வீசும் காலத்தில், சிலவற்றில் நாம் கவனக்குறைவாக இருந்தால் உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்கிறார், கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் முதல்வர் (டீன்) நிர்மலா.

அதை விளக்கிய நிர்மலா, “வெயிலின் தாக்கத்தால் ஹீட் ஸ்டிரோக் (வெப்ப பக்கவாதம்) மட்டுமின்றி, இதயம் பலவீனமாக இருப்பவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது. தேர்தல் பணியோ அல்லது சாதாரண பணியோ எதுவாக இருந்தாலும், மதிய நேர வெயிலில் சுற்றுவதை கட்டாயம் தவிர்க்க வேண்டும்.

வெயிலின் தாக்கத்தால் திடீரென தற்காலிகமாக சில நிமிடங்களுக்கு ஞாபகம் இழப்பது, நெஞ்சு எரிச்சல், மயக்கம், திடீரென வியர்ப்பது போன்றவை ஏற்பட அதிகம் வாய்ப்புள்ளது. இது ஹீட் ஸ்டிரோக் (வெப்ப பக்கவாதம்) அல்லது மாரடைப்புக்கான அறிகுறிகளாக இருக்கலாம். இது போன்றவை ஏற்பட்டால், சாதாரணமாக நினைத்து கவனக்குறைவாக இருந்தால் உயிருக்கே ஆபத்தாகும், உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்,” என்கிறார் அவர்.

### சுகாதாரத் துறை அறிவுரைகள்

தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறை வெப்ப அலை பாதிப்பு குறித்து பொதுவான அறிவுரைகளையும் வெளியிட்டுள்ளது.

பயணத்தின் போது கட்டாயம் குடிநீர் எடுத்துச் செல்லவும். உடலில் நீர் பற்றாக்குறையை போக்க போதிய நீர் குடிக்க வேண்டும்.

நீர் பற்றாக்குறையை போக்க ஓ.ஆர்.எஸ் (**Oral Rehydration Solution**) கரைசல், எலுமிச்சை ஜூஸ், இளநீர், மோர் மற்றும் பழச்சாறுகள் குடிக்கவும்.

வெளியில் செல்லும் போது பருத்தி ஆடை, காலணிகளை அணிய வேண்டும். வெறும் காலில் வெயிலில் செல்வதை தவிர்க்கவும்.

செயற்கை குளிர்பானங்கள், மது அருந்துதல் மற்றும் புகை பிடிப்பதை தவிர்க்க வேண்டும்.

வெயிலில் பாதித்தவர்கள் ஆடையின் மேல் குளிர்ந்த நீரை ஊற்றவும்.

குழப்பமான மனநிலையில், சோர்வாக உள்ளவர்களிடம் அவர்களின் நலன் குறித்து விசாரிக்க வேண்டும்.

அதிக உடல் வெப்பநிலையில் மயக்கம் அடைந்தால், ஆம்புலன்ஸ் மூலம் அவர்களை சிகிச்சையில் சேர்க்கவும்.

மிகவும் சோர்வாக இருந்தால் அருகில் உள்ள துணை சுகாதார நிலையம், அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது மருத்துவமனை சென்று ஓ.ஆர்.எஸ் வாங்கி குடித்து, மருத்துவரிடம் ஆலோசனை பெறவும். ●

# காஸா போர்: தப்பிக்க முயன்ற மக்களை...

(14ம் பக்கத் தொடர்ச்சி)
இருந்த ஐடிஎஃப் அமைப்பின் மாஸ்டர் பிளாக் வரைபடத்தை அணுகி, கணவர் சலே எங்கிருக்கிறார் என்பதைக் குறிப்பிட முடிந்தது.

ஆனால், முகநூலில் இருந்த வெளியேற்ற எச்சரிக்கையைத் திரும்பிப் பார்க்கையில், சலே தங்கியிருந்த தொகுதி இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்ததை தம்பதியினர் உணர்ந்தனர். இது மேலும் குழப்பத்தை ஏற்படுத்தியது.

இறுதியில், சலே குழந்தைகளுடன் வெளியேற முடிவு செய்தார். ஆனால் அவரது குடும்பத்தில் சிலர் போர் அடுத்த கட்டத்தை எட்டும் வரை அங்கேயே இருந்தனர். சலே புரிந்துகொள்ள முயன்ற அந்த வெளியேற்ற எச்சரிக்கை குறித்த முகநூல் பதிவை பிபிசி பகுப்பாய்வு செய்தது. அதில் பல குழப்பமான அம்சங்கள் இருப்பதைக் கண்டோம்.

பதிவின் செய்தியில், 2220, 2221, 2222, 2223, 2224 மற்றும் 2225 ஆகிய தொகுதிகளை விட்டு மக்கள் வெளியேற வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. ஐடிஎஃப் அமைப்பின், இந்தத் தொகுதிகள் அனைத்தும் ஐடிஎஃப்-இன் ஆன்லைன் மாஸ்டர் வரைபடத்தில் இருப்பவை.

ஆனால் அந்தப் பதிவில் உள்ள வரைபடத்தில், ஆறு தொகுதிகள் ஒன்றாக இணைக்கப்பட்டு, தொகுதி 2220 எனத் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த முரண்பாடுகள் இருந்தபோதிலும், ஜனவரியில், இஸ்ரேல் இனப்படுகொலை செய்வதாக தென்னாப்பிரிக்கா முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கு எதிரான வாதத்தின் ஒரு பகுதியாக, தனது தடுப்பு எச்சரிக்கை அமைப்பை சர்வதேச நீதிமன்றத்தின் முன்வைத்தது இஸ்ரேல் அரசு.

“இஸ்ரேல் அரசு குடிமக்களைப் பாதுகாக்கத் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்து வருவதாகவும், முழுப் பகுதிகளையும் காலி செய்வதற்குப் பதிலாக, குறிப்பிட்ட பகுதிகள் தற்காலிகமாக வெளியேற்றப்படும் வகையில் விரிவான வரைபடத்தை அரசு உருவாக்கியுள்ளதாகவும்” வாதிட்டனர் இஸ்ரேலின் வழக்கறிஞர்கள்.

அவர்கள் நீதிமன்றத்தில் ஆதாரமாக முன்வைத்த ஒரு சமூக ஊடக எச்சரிக்கை பதிவில், இரண்டு பிழைகளை பிபிசி கண்டறிந்துள்ளது. பிளாக் 55 மற்றும் 99 ஆகியவை டிசம்பர் 13 வெளியிடப்பட்ட பதிவில் உள்ள செய்தியில் பட்டியலிடப்பட்டுள்ளன, ஆனால் அவை வரைபடத்தில் குறிக்கப்படவில்லை.

ஐடிஎஃப் அதன் அரபு ட்விட்டர் கணக்கு மூலம், வெளியேற்றப்படும் பகுதிகளுக்கு அருகில் உள்ள தங்குமிடங்களின் இருப்பிடம் பற்றிய தகவலை வழங்கி வருவதாகவும் இஸ்ரேலிய வழக்கறிஞர்கள் கூறினர்.



ஆனால் பிபிசி பகுப்பாய்வு செய்த அனைத்து பதிவுகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களில் தங்குமிடங்களின் பெயர்கள் அல்லது அவற்றின் சரியான இருப்பிடங்களை வழங்கும் எந்த எச்சரிக்கையையும் நாங்கள் காணவில்லை.

பிபிசி பகுப்பாய்வு ஐடிஎஃப்-இன் பிளாக் சிஸ்டம் சீரற்ற முறையில் பயன்படுத்தப்பட்டதையும் கண்டறிந்துள்ளது. 26 எச்சரிக்கைகளில் ஒன்பது தொகுதிகளின் எண்கள் மற்றும் அருகிலுள்ள பகுதிகளின் பெயர்கள் கலவையாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.

மற்ற ஒன்பது எச்சரிக்கைகளில் தொகுதி எண்கள் இல்லை. ஆன்லைன் மாஸ்டர் வரைபடத்துடன் இணைக்கப்பட்டிருந்தாலும், அதற்குப் பதிலாக அவை சுற்றுப்புறப் பகுதிகளைத்தான் பட்டியலிட்டன. அதில் பெரும்பாலும் தொகுதிகளின் பெயர்கள் மட்டுமே உள்ளன, எண்கள் இல்லை.

இந்த சுற்றுப்புறப் பகுதிகளின் சரியான தொகுதிகளைத் தீர்மானிக்க பிபிசியால் ஒரு வழியைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

கிட்டத்தட்ட 32 பேரை உள்ளடக்கிய அப்து குடும்பம், போரின் தொடங்கிய நேரத்தில் காஸா நகரத்திலிருந்து மத்திய காஸாவிற்கு தப்பிச் சென்றது. பின்னர், டிசம்பரில், ஒரு விமானத்தில் இருந்து கைவிடப்பட்ட எச்சரிக்கை துண்டுப்பிரசுரம் அவர்களுக்குக் கிடைத்தது.

பிபிசிக்கு கிடைத்த குடும்ப வாட்ஸ்அப் குழுவில் உள்ள செய்திகள் மூலம், அந்த துண்டுப் பிரசுரத்திற்கு அர்த்தம் என்னவென்று இரண்டு நாட்களாக அவர்கள் வாதிட்டதால் அவர்களுக்குள் ஏற்பட்ட குழப்பத்தை அறிந்துகொள்ள முடிந்தது.

அதில் வெளியேற வேண்டிய அக்கம்பக்கத்தினரின் பட்டியல் இருந்தது, ஆனால் குடும்பத்தாரால் அந்த இடங்களில் பெரும்பாலானவற்றைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அதிலிருந்த எச்சரிக்கை செய்தி, “அல்-புரிஜ் முகாம் மற்றும் பத்ர், வடக்கு கடற்கரை, அல்-நுஷா, அல்-சஹ்ரா, அல்-புராக், அல்-ரவ்தா மற்றும் அல்-சஃபா ஆகியவற்றின் சுற்றுப்புறங்களில் இருந்து வாடி காஸாவின் தெற்கே உள்ள பகுதிகளில் இருந்து வெளியேறுமாறு மக்களைக் கேட்டுக் கொண்டது.”

அவர்கள் அல்-சஹ்ரா மற்றும் பத்ரை ஆகிய பகுதிகளை அடையாளம் கண்டுகொண்டோம். ஆனால் அவை வாடி காஸா ஆற்றங்கரைக்கு வடக்கே உள்ளன. ”வாடி காஸாவின் தெற்கே உள்ள பகுதிகளில்” அல்-ரவ்தா அல்லது அல்-நுஷாவின் பகுதிகளை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

“அவர்கள் இங்கேயே தங்கி கடுமையான தரைப் போரில் சிக்கிக் கொள்ள வேண்டுமா, அல்லது இங்கிருந்து வெளியேறி, அவர்களுக்குக் கிடைத்த ஒரே தங்குமிடத்தை விட வேண்டுமா?” என்று அப்து குடும்பத்தினர் முடிவெடுக்க முடியாமல் தவித்தனர்.

சிலர் “டேர் அல்-பாலாவில் உள்ள தங்குமிடங்களுக்கு” செல்லுங்கள் என்று கூறிய எச்சரிக்கை தகவலைப் பின்பற்றிச் சென்றனர். ஆனால் அங்கு சென்றதும் அந்த இடத்தைப் பாதுகாப்பற்றதாக உணர்ந்து திரும்பிச் செல்ல முடிவு செய்தனர். அப்படி நாங்கள் இறந்தால், ஒன்றாகவே இறப்போம் என்று அவர்கள் எங்களிடம் கூறினார்கள்.

ஓரிகான் ஸ்டேட் பல்கலைக்கழகத்தின் ஜமோன் வான் டென் ஹோக் மற்றும் சிட்டி யுனிவர்சிட்டி நியூயார்க் கிராஜ/வேட் சென்டரின் கோரே ஷெர் ஆகியோரால் பகுப்பாய்வு செய்யப்பட்ட காஸாவின் அழிவு குறித்த செயற்கைக்கோள் தரவு, அவர்கள் விட்டுச் சென்ற பகுதியைவிட அதிக அழிவைக் காட்டியது.

செயற்கைக்கோள் தரவுகள், அந்தக் குடும்பம் தப்பியோடிய டெய்ர் அல்-பாலா பகுதி இந்தக் காலகட்டத்தில் மிகவும் தீவிரமான தாக்குதலுக்கு உட்பட்டிருந்ததைக் காட்டுகிறது.

இஸ்ரேலிய பாதுகாப்புப் படை “இந்த எச்சரிக்கைகளுக்குப் பிறகு அங்கு நிலவிய பொதுமக்கள் நடமாட்டம் குறித்த தரவுகளை” குறுக்கு சோதனை செய்ததாகவும், அவை குழப்பமானதாகவோ அல்லது முரண்பாடாகவோ இல்லை என்றும் கூறியது.

இந்த எச்சரிக்கைகள் மூலம் “காஸா பகுதியில் எண்ணற்ற பொதுமக்களின் உயிர்களைக் காப்பாற்றியுள்ளதாகவும்” அது கூறுகிறது.

●

